Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-18

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-21 | 06-09-2004 | திங்கட்கிழமை | ஓசை -201

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி. (சி-10335)
R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.

# ஜே.வி.பி யின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது

# சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்

## அமைச்சர்கள் சிலர் சனாதிபதியிடம் கோருவர்

**ஜே.வி.பி யினரின் எதிர்ப்புக்களைப் பெரிதுபடுத்தாமல் சமாதான நடவழக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென அமைச்சர்கள் சிலர் சனாதிபதியிடம் கேட்கவுள்ளதாக அமைச்சர் தி.மு.ஜெயரத்தின கொழும்பு வார இதழ் ஒன்றிற்குத் தெரிவித் துள் ளார்.**

எதிர்வரும் 13 ஆம் திகதி சமாதான நடவடிக்கை தொடர்பாகப் பேச்சு நடத்த நோர்வேயின் விசேடதூதுவர் இங்கு வரும் போது மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்தலை உறுதிப்படுத்துமாறு சனாதிபதியைக் கேட்டுக் கொள்ள விருப்பதாக அவர் தெரிவித்துள் ளார். இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்கு மாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பொ.ஜ. மு. அமைச்சர்கள் சனாதிபதியைக் கேட்கவுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

## பேச்சுவார்த்தை குறித்த சந்திரிகாவின் அறிவிப்புக்கு ஐ.தே.கட்சி வரவேற்பு

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசிப்பது என சனாதிபதி சந்திரிகா எடுத்த தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன இது பற்றித் தெரிவிக்கையில் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் சகல கட்சிகளும் புரிந்துணர்வுடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டுமென்று கூறினார்.

நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் உடனடியாக பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பவேண்டும் வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற வேண்டும்.

இப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு அளிக்கும் என்றார்.

பொருளாதார நிலைமை பற்றி கருத்துத் தெரிவிக்கையில் வாழ்க்கைச் செலவீனத்தைக் கட்டுப் படுத்த அரசாங்கம் தவறியுள்ளது. பாவனைப் பொருட் களின் விலை அதிகரிப்பிற்கு முக் கிய காரணம் டொலருடனான ரூபாவின் பெறுமதி குறைந்திருப் பதே அத்துடன் அரசாங்கம் உறுதியளித்தவாறு

(18 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழீழ மீட்புநிதி மீளளிப்பு விபரம்

தமிழீழ மிட்புநிதிக்கடன் மீளளிப்புக்குத்தெரிவு செய்யப்பட டோரின் பெயர் விபரங்கள் நாளை முதல் ஈழநாதம் நாளேட்டில் வெளி வரும்.

## தமிழீழ மீட்பு நிதிக்கடன் 3000 பேருக்கு மீளளிப்பு

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து இருநூறு பேருக்கும் மூப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து எண்ணூறு பேருக்குமான மொத்தம் மூவாயிரம் பேரிற்குத் தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பான விபரங்கள் தமிழீழ நிதித்துறையால் வெளியிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வெளியிடப்பட்ட

**தெரிவுத் தொகுதி**

| | | |
|---|---|---|
| 1. | நல்லூர் | 386 |
| 2. | யாழ்ப்பாணம் | 194 |
| 3. | கோப்பாய் | 325 |
| 4. | உடுவில் | 222 |
| 5. | மானிப்பாய் | 225 |
| 6. | தெல்லிப்பளை | 186 |
| 7. | சங்கானை | 235 |
| 8. | காரைநகர் | 30 |
| 9. | வேலணை | 104 |
| 10. | கரவெட்டி | 246 |
| 11. | பருத்தித்துறை | 195 |
| 12. | வடமராட்சி கிழக்கு | 30 |
| 13. | சாவகச்சேரி | 249 |
| 14. | பச்சிலைப்பள்ளி | 19 |
| 15. | கிளிநொச்சி | 191 |
| 16. | வவுனியா | 41 |
| 17. | முல்லைத்தீவு | 82 |
| 18. | மன்னார் | 40 |
| | | 3,000 |

## வல்லை வெளியிலுள்ள சேமக்காலைப் பகுதியில் பெண்ணின் எலும்புக்கூடு கண்டுபிடிப்பு

வடமராட்சி வல்லை வெளியிலுள்ள கிறிஸ்தவ சேமக்காலையொன்றினருகேயுள்ள பற்றைப் பகுதியினுள் மனித எலும்புக் கூடொன்று கண்டுபிடிக்கப் பட்டுள் ளது. யாழ்.பருத்தித்துறை வீதியிலிருந்து பிரிந்து செல்லும் மண்டான் வீதியிலுள்ள சேமக்காலைப பகுதியினிலேயே இவ் எலும்புக்கூட்டுத் தொகுதி கண்டுபிடிக்கப்பட்டுள் ளது.

பெண் ஒருவருடையதாக இருக்கலாமென நம்பப்படும் இவ் எலும்புக்கூட்டினருகே இரத்தக் கறையுடன் கூடிய, இளம்பெண்கள் அணியும் உள்ளாடையொன்றும், வெளிறிப்போன சேலையும் இன்னும் சில பொருட்களும் காணப்படுகின்றன.. உள்ளாடை உக்காத நிலையில் இருப்பதனையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

1996 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு படையினரால் கைப்பற்றப் பட்ட தையடுத்து கணிசமான காலப்பகுதிவரை சேமக்காலைப் பகுதிக்கு பொதுமக்கள் செல்ல படைத்தரப்பு அனுமதிக்கவில்லை அத்துடன் இச் சேமக்காலைப் பகுதியில் இராணுவ முகாமொன்று அமைக்கப்பட்டிருந்ததும் பின்னர் அது மூடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## முல்லை.கடற்றொழிலாளர் மீதான தாக்குதலைக் கண்டித்துப் பேரணி

கடந்த முதலாம் திகதி முல்லைத்தீவு மாத்தளன் கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்கள் நால்வர் மீது சிறிலங்கா கடற்படை மேற் கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பேரணி நாளை முல்லைத்தீவில் நடைபெறவுள்ளது.

முல்லை மாவட்ட கடற் றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் தலைமையின் கீழ் அதன் கிளைச் சங்கங்களும் இணைந்து மாலை

(18 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.அம்பாறை மாவட்டங்களில் நேற்று பூரண துக்கதினம் அனுஷ்டிப்பு

1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்களில் 158 பேர் சிறிலங்கா படையினரால் படுகொலை செய்யப்பட்டதன் 14ஆவது ஆண்டு நிறைவையொட்டி மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் நேற்று பூரண துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக படுகொலைச் சம்பவம் மற்றும் அந்தக்காலப் பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராக கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற படுகொலைகளை நினைவு கூரும் வகையில் வருடாந்தம் செப்ரெம்பர் 5ஆம் திகதி தமிழின உயிர்க்கொலை நாளாக பிரகடனப்படுத்தப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் நேற்று துக்கம்

(18ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு ஏற்பட்ட இழப்புக்களை மூடி மறைத்து விட அரசு முயல்கின்றது

### அரசியல்துறை மகளிர்பொறுப்பாளர் தமிழினி



(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுநூலகத்தில் படிந்திருந்த கறைகளும் வடுக்களும் மூடிமறைக்கப்பட்டு எவ்வாறு வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையாக யாழ். பொது நூலகம் புனரமைக்கப்பட்டதோ அதே போல தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகளையும் இழப்புக்களையும் மூடிமறைத்து தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளுக்குப் புறப்பான அரசியல் தீர்வினை முன்வைக்க பேரினவாத அரச தலைவர்கள் முயன்று வருகின்றனர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

வேலும் மயிலும் மகவதாஸ காந்தம்ஆகியஎனது (482020291V) இலக்கமுடைய அடையாள அட்டை முகமாலை வன்னிவரும் பஸ்தரிப்பு நிலையத்தில் 31.08 2004 செவ்வாய்க்கிழமை அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து ஈழநாதம் பணி மனையில் ஒப்படைக்கும் படி பணி வுடன் வேண்டுகின்றேன். (4911)

## வீதிப் புனரமைப்புபணிகள் ஆரம்பம்

விசுவமடு- மாணிக்கபுரம் கிராமத்தின் அம்மன் கோவில் வீதி புனரமைப்பிற்கான ஆரம்ப வைபவம் கடந்த 30ஆம் திகதி யன்று 10.00மணிக்கு மாணிக்க புரம் கமக்கார அமைப்புத் தலை வர் தலைமையில் ஆரம்பமானது.

விசுவமடுப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் கருத்துரை வழங் கினார். (19)

# கிளி,முல்லை. ஆசிரியர்களுக்கு ஆசிரிய வாண்மை விருத்தி தினம்

வன்னியிலுள்ள கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களின் வாண்மை விருத் தியை மேம்படுத்தும் நோக்குடன் வடக்கு, கிழக்கு மாகாண ஆசிரிய நிலையங்கள் நடாத்தும் ஆசிரிய வாண்மை விருத்தி தினம் எதிர் வரும் 10ஆம்,11ஆம் திகதிகளில் கிளி/கிளிநொச்சி மகாவித்தியா லயத்தில் வலயக்கல்விப் பணிப் பாளர் ப.அரியரத்தினம் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அவர்களும், சிறப்பு விருந்தினர்க ளாக வவுனியா மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் கே. எம். அக மட்கான், கிளி பிரதி மாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர் த.சத் தியமூர்த்தி, வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி தலைவர் க.பேணாட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் ஆசிரிய வாண்மைதின நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 350ஆசிரியர்களும்,30 ஆசிரிய ஆலோசகர்களும் கலந்து கொள் ளவுள்ளனர். ஆசிரிய வாண்மை தின நிகழ்வில் 10 அறிவுக்குழுக் களாக பிரிக்கப்பட்டு பின்வரும் தலைப்புகளில் நடைபெறும், விளை யாட்டு மூலம் ஆரம்ப கணிதம் கற்றல் உத்திகள் என்னும் தலைப பில் வடக்கு, கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தினரும், செயலாய்வும் செயற்பாடுசார் பாடத்திட்டமிடலும் என்னும் தலைப் பில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியினரும், ஆசிரிய வாண்மை விருத்தியில் ஜி.ரி.இசற் என்னும் தலைப்பில் கிளி ஜி.ரி. இசற் நிறுவனத்தினரும், வினைத் திறன் மிக்க கற்றலின் பிரதிபலிப் புக்கள் என்னும் தலைப்பில் மன் னார், கந்தளாய், அம்பாறை தெஹி வத்த கண்டி ஆகிய ஆசிரிய நிலையங்களும், குழுவாக்கல் உத் திகள் என்னும் தலைப்பில் கல் குடா, கல்முனை, மட்டக்களப்பு ஆசிரிய நிலையங்களும், மாண வர்கள் எதிர்நோக்கும் உளவியல் சவால்கள் என்னும் தலைப்பில் வலிகாமம் வடமராட்சி ஆசிரிய நிலையத்தினரும், மகிழ்ச்சிகரமான கற்றல் என்னும் தலைப்பில் வவு னியா தெற்கு, வவுனியா வடக்கு, முருங்கன், துணுக்காய், கிளி நொச்சி, மடு ஆகிய ஆசிரிய நிலை யத்தினரும், புத்துணர்வு ஊட்டல் நுட்பங்கள் என்னும் தலைப்பில் பட்டிருப்பு, அக்கரைப்பற்று, முல் லைத்தீவு ஆகிய ஆசிரிய நிலை யத்தினரும் கற்றல் கற்பித்தல் ஊடகமாக பொம்மலாட்டம் என்னும் தலைப்பில் திருகோண மலை, மூதூர் ஆகிய ஆசிரிய நிலையத்தினரும், நவீன கற்றல்-கற்பித்தல் துணைச் சாதனங்கள் என்னும் தலைப்பில் யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய ஆசிரிய நிலை யத்தினரும் அறிவுத் தொகுப் புக்களை வழங்கவுள்ளனர். (14)

## தமிழீழ மீட்பு நிதிக் கடன்மீளல் 2004


### மீளளிப்பு நடைமுறைகள்.

1. கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகை தந்து கடனை மீளப்பெற வேண்டும்.
2. ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதர வேண்டும்.
3. கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப் பின்னுரித்தாளர் கொண்டுவர வேண்டும்.
   - *இறப்புச் சான்றிதழ்*
   - *இறப்புச் சான்றிதழின் படி (பிரதி)*
   - *கடன் சான்றிதழ்*
   - *பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்*
   - *பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்.*
4. கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
5. அ). மீளளிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.

   ஆ). அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5அங்.×2.0அங். அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக் கொள்ளப்படும்.

# வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பேருந்து தரிப்பிடமின்மையால் மக்கள் அவதி

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் 06 பேருந்துத் தரிப்பிடங்கள் உள்ளபோதும் தற்போது இரண்டு (04) பேருந்து தரிப்பிடங்களே காணப்படுகின்றன. அவையும் சிதைவுற்றும் , விலங்குகளின்



படம்:- ரூபன

எச்சங்களுடனும் காணப்படுவதால் பயணிகள் கடும் அவதிப்பட்டு வருகின்றனர். கட்சன் வீதிப்பகுதியில் இருந்த பேருந்து தாரிப்பிடம் 1996 ஆம் ஆண்டின் பின் இருந்த இடம்கூட இல்லாமற் போயுள்ளது. எனவே கட்சன்வீதியில் இருந்து பயணிக்கும் பயணிகள் மரத்தின் கீழ் இருந்தே பேருந்தை எதிர்பார்த்தபடி இருக்கின்றனர். இவ்விடத்தில் இருந்து பேருந்துக்கு முன்புறமாக ஓடியே பேருந்தை மறிக்கின்றனர். இதனால் வீதிவிபத்துக்களும் ஏற்பட்டுள்ளது. மற்றும் சில்வா வீதியில்இருக்கும் பேருந்துத் தரிப்பிடம் இடிந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் சந்தையடிப்பகுதியிலும் புதுப்பாலத்தின் பகுதியிலும் பயணம் செய்யக்காத்திருக்கின்றனர். இப்பேருந்து நிலையங்கள் இன்மையினால் குழந்தைகள் தொடக்கம் வயோதிபர் வரை தற்போது பேருந்தை எதிர்பார்த்து வெய்யிலில் காத்திருக்கின்றனர். எனவே வரும் காலம் மாரி காலத்தில் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட வாய்ப்புண்டு. (12)

## பூநகரி மகாவித்தியாலயத்தில் நாடகப் பயிற்சிப் பட்டறை

கிளி.பூநகரி ம.வி. இல் 3 நாள் நாடகப் பயிற்சிப் பட்டறை கடந்த வெள்ளி பி.ப.3.30 மணியளவில் அதிபர் பொன் தில்லைநாதன் தலைமையில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் ஆசியுரையை பூநகரிக் கோட்டக்கல்வி பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை வழங்கினார். இப் பட்டறைக்கான கருத்து ரையை ஒக்ஸ்பாம் நாடகத்துறை இணைப்பாளர் சுரேகா ஆற்றினார். நன்றியுரையை உப அதிபர் புஸ்பராசா ஆற்றினார். (39)

# திருமலை மாவட்டத்துக்கான ரயில் சேவைகள் பாதிப்பு

(திருகோணமலை)

திருகோணமலைக்கான ரயில் சேவைகள் சீர்குலைந்தும் பயணி களின் சேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாததாகவும் காணப் படுகின்றன என்று திருகோண மலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ணசிங்கம் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார். கடிதத்தின் பிரதியை அவர் இலங்கை ரயில்வே அதிகார சபை யின் பொது முகாமையாளருக்கு அனுப்பிவைத்திருக்கின்றார்.

"திருகோணமலையிலிருந்து கொழும்பு மற்றும் வெளியிடங் களுடன் நடத்தப்படும் ரயில் சேவைகள் சீர்குலைந்து போயுள் ளன. இரண்டாம் வகுப்புப் பெட்டி கள் மற்றும் உறங்கலிருக்கைகள் மூன்றாம் வகுப்புப் பெட்டிகளிலும் பார்க்க மோசமாகக் காட்சியளிக் கின்றன.கூடுதல் கட்டணம் செலுத் தியும் சௌகரியமாகப் பயணம் செய்ய முடியாத நிலைக்குப் பய ணிகள் ஆளாகியுள்ளனர். போது மான அளவு பயணிகள் பெட்டி கள் திருமலை ரயில்களுடன் இணைக்கப்படுவதில்லை. மின் வெளிச்ச வசதியின்றி இருளில் பயணஞ் செய்யவேண்டிய நிலை காணப்படுகின்றன. கழிவறை வசதிகள் கிடையாது, ஆசனங்கள் உடைந்த நிலையில் காணப்படு கின்றன. பேருக்குத்தான் காற்றாடி கள் மற்றும் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அவற் றைப் பாவிக்க முடியாதபடி சேத மடைந்துள்ளன" என்று பாரா ளுமன்ற உறுப்பினர் துரைரெட் ணசிங்கம் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். திருமலையிலி ருந்தும் மட்டக்களப்பிலிருந்தும் காலை 7மணிக்கு தினமும் ரயில் சேவை நடத்தப்படவேண்டும். முத லாவது வகுப்புப்பெட்டிகள் உறங்கலிருக்கை ரயில்காரர்கள் ஆகியவற்றின் சேவைகளை திரு மலைக்கான ரயில் சேவையுடன் வழங்கவேண்டும் என்றும் துரை ரெட்ணசிங்கம் தனது கடிதத்தில் கோரியுள்ளார். (25)

# செப்ரெம்பர் மாத "விழி" மருத்துவ இதழ் வெளிவந்தது

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் செப்ரெம்பர் மாத மருத்துவ இதழ் 'விழி' வெளிவந்துள்ளது.விசர்நாய்க் கடி நோய் என்னும் தலைப்புச் செய்தியுடன், யோகாசனம் ஒரு மருத்துவமா, மற்றும் கர்ப்பவதிகளின் உளநலம் பேணுவோம், ஆண்களின் மலட்டுத் தன்மை ஏன்?. மன இறுக்கம்போன்ற பல்வேறு செய்திகளைத்தாங்கி செப்ரெம்பர் மாத மருத்துவ இதழ்'விழி' இதழ் 48 வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)


## பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம்

### அறிவித்தல்

**கூறுவிலை கோரல்**

*01. சங்கத்தில் பாவனையற்று இருக்கும் மின் நெசவு தறிகள் (32) விற்பனைக்கு உள்ளன.*

*02. பாவித்த கைத்தறிகள் விற்பனைக்கு உள்ளன.*

*03. மின்பிறப்பாக்கி (றொபின் 3கே. வி)விற்பனைக்குள்ளானது. பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு இதற்கான கூறுவிலையை 21. 09. 2004க்கு முன்னர் ''பொதுமுகாமையாளர்'' பண்டத் தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு என்ற முகவரிக் குப் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும்.*

பொதுமுகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

(சி.10153)


## துயர் பகிர்வோம்

மலர்வு 10 - 05 - 1919



உதிர்வு 04 - 09 - 2004

### அமரர் சின்னத்தம்பி வியாளம்மா

(7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மேற்கு கிராம சேவை உத்தியோகஸ்தர் திரு. சின்னத்தம்பி- சுப்பிரமணியம் அவர்களின் அன்புத்தாயார் அமரர் சின்னத்தம்பி - வியாளம்மா அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயருறுவதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றி ருக்கும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்ளுகின்றோம்.

சக கிராமசேவை அலுவலர்கள்
பிரதேச செயலகம்
புதுக்குடியிருப்பு

(சி-9192)

# அச்சுறுத்தலை ஆற்றலுடன் சமாளிக்க அதிகாரிகள் தவறிவிட்டனரென்கிறார் புட்டின்



பாடசாலையில் தீவிரவாதிகளின் தாக்குதலில் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை ரஷ்ய சனாதிபதி விளாடிமீர் புட்டின் பார்வையிட்டு ஆறுதல் தெரிவிக்கிறார்.

(மொஸ்கோ)

**நாடுஎதிர்நோக்கியுள்ள அச்சுறுத்தலை ஆற்றலுடன் சமாளிக்க ரஷ்ய அதிகாரிகள் தவறிவிட்டனர். அல்லது அந்த அச்சுறுத்தலை இனங்காண அவர்கள் தவறிவிட்டனர் என்று ரஷ்ய சனாதிபதி விளாடி மீர்புட்டின் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்.**

ரஷ்யாவின் பாடசாலை கட்டடம் ஒன்று தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்டதையடுத்து அதனை மீட்பதற்கு ரஷ்ய இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கை பாரிய ரத்தக்களரியில் முடிவுற்றதைத் தொடர்ந்து அவர் இந்தக்கருத்தைத் தெரிவித்தார்.

இச்சம்பவம் பற்றி மேலும் கருத்து வெளியிட்ட ரஷ்ய சனாதிபதி விளாடிமீர்புட்டின் பயங்கரவாதத்திற்கெதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளில் ரஷ்யா பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

இக்கட்டான நேரங்களில் பாது காப்பு படையிடம் இருந்து பாது காப்பை வேண்டி நிற்கும் உரிமை ரஷ்ய மக்களுக்கு உண்டு என்று தெரிவித்துள்ள அவர் சிறுவர்களை பணயமாகப்பிடித்த தீவிரவாதிகளை கடுமையாக கண்டித்தார்.

இச் சம்பவம் குறித்து 10 நிமிடங்கள் உரையாற்றிய ரஷ்ய சனாதிபதி செச்சினியா பற்றி ஒரு வார்த்தையேனும் குறிப்பிடவில்லை.

பாடசாலை சிறுவர்களை காப்பற்றுவதற்காக ரஷ்ய இராணுவம் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் போது உயிரிழந்தோரின் எண்ணிக்கை 330 ஆக அதிகரித்துள்ளது.

மாணவர்கள் பெற்றோர்கள் உட்பட1500 பேர் பணயக் கைதிகளாக பிடித்துவைக் கப்பட்டிருந்தது தெரிந்ததே.



ஈராக்கின் கிர்குக் நகரில் நேற்று முன்தினம் தற்கொலை குண்டுதாரியால் மேற்கொள்ளப்பட்ட கார் குண்டுவெடிப்பு இத்தாக்குதலில் 20 பேர் பலியானதோடு 35 பேர் காயமடைந்தது தெரிந்ததே.

# சர்வதேச பயங்கரவாதி பின்லேடன் எந்த நேரத்திலும் கைதுசெய்யப்படலாம்

## – அமெரிக்கா சொல்கிறது.

சர்வதேச பயங்கரவாதி பின்டேலன் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்று அமெரிக்கா சொல்கிறது.

அமெரிக்க நாட்டின் தீவிரவாத ஒழிப்பு இலாகா ஒருங்கிணைப்பாளர் ஜே.கோபர் பிளாக் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் நகரில் நிருபர்களுக்குப் பேட்டிஅளிக்கும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

தீவிரவாதிகளைப் பிடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தயார் நிலையில் இருக்கின்றன. அவர்களது மறைவிடத்தை மட்டும் இன்னும் சரியாகக் கவனித்து வருகிறோம்.

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் நாம் ஈடுபட்டுள்ளோம். உலகமே இப்போது இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளது. மக்களுக்கு எதிரான தீவிரவாதம் வெற்றிபெற்றதில்லை. தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் நாளையோ, நாளை மறுநாளோ, ஒருவாரத்திலோ அல்லது இப்போதிருந்து ஒரு மாதத்திலோ பிடிபடலாம். தீவிரவாதத்திற்கு மூளையாகச் செயற்பட்டு வரும் ஒஸாமா பின்லேடனும், அவனது நெருங்கிய கூட்டாளிகளும் எந்த நேரத்திலும் பிடிபடுவார்கள். பாகிஸ்தானில் அல்-ஹைதா தீவிரவாதிகள் பிடிபட்டதிலிருந்து இதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. பாகிஸ்தானில் கடந்த சில மாதங்களாகப்பிடிபட்டு வரும் அல்-ஹைதா இயக்க தீவிரவாதிகள் மிகவும் முக்கியமானவர்கள். அவர்கள் பின்லேடனுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். நாம் இப்போது மிகவும் பாதுகாப்பாக இருக்கிறோம். தீவிரவாத செயல்களை அவர்கள் நீண்ட காலத்துக்கு சுதந்திரமாகச் செயற்படுத்த முடியாது. ஒஸாமா பின்லேடனைப் பிடித்து விடுவதால் மட்டும் தீவிரவாதத்திற்கு எதிரான போர் முடிந்து விட்டதாக நினைத்து விடக்கூடாது. அவனைக் கைது செய்த பிறகு நாம் நமதுசெயற்பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டும். அதன் பிறகு தான் பெண்களும், குழந்தைகளும் பாதுகாப்பாகஇருப்பார்கள் என அவர் மேலும் கூறினார்.

# ஈராக்கில் இராணுவ நடவடிக்கை 80 பேர் பலி 580 பேர் கைது

(பாக்தாத்)

ஈராக் தீவிரவாதிகளில் முக்கிய நபரான இம்ராகிம் அல்தூரியைப் பிடிக்க ஈராக்கிய மற்றும் அமெரிக்கப்படையினர் பல இடங்களில் நேற்று மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது 12 பொலிசார் உட்பட 80 பேர் கொல்லப்பட்டும் 580 பேர் கைது செய்யப்பட்டுமுள்ளதாக ஈராக்கிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சதாம் குசைனின் சொந்த ஊரான சிக்றிட் நகரில் இடம்பெற்ற நடவடிக் கையின் போது 70 பேர் கெல்லப்பட்டதோடு 80 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஈராக்கிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அல் தௌரி இது வரை கைதுசெய்யப்படவில்லை என்றும் அவரைப் பிடிக்க உதவுவர்களுக்கு 10 மில்லியன் டெலர் சன்மானம் வழங்கப்படும் என்றும் அமெரிக்கப்படையினர் அறிவித்துள்ளனர்.

மேலும் தலாபர் சென்ற இடத்தில் தீவிரவாதிகளுக்கும் அமெரிக்கப்படையினருக்குமிடையில் இடம் பெற்ற மற்றொரு சண்டையில் இரு தரப்பிலும் 13 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்கப்படையினர் கூறியுள்ளனர்.



பாக்தாத்திலுள்ள பிரான்சிய தூதரகத்தின் முன்னால் பிரான்ஸ் பிணைக்கைதிகள் குறித்து செய்தி சேகரிக்கக் காத்திருக்கும் ஊடகவியலாளர்.

# காஸாவில் உலோகவார்ப்பு தொழிற்சாலை மீது இஸ்ரேலிய உலங்குவானூர்திகள் தாக்குதல்

(ஜெருசலேம்)

காஸா பகுதியிலுள்ள உலோக வார்ப்பு தொழிற்சாலை மீது இஸ்ரேலிய உலங்கு வானூர்திகள் தாக்குதல்கள் நடத்தியுள்ளன.

இந்த வாரத்தில் இடம் பெற்ற பலஸ்தீனத் தீவிரவாதிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் முகமாகவே காஸாப்பகுதியில் இஸ்ரேல் இத்தாக்குதலை நடத்தியுள்ளது.

இத்தாக்குதலில் கட்டடப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பயன்படுத்தப்படும் நிலையம் முற்றாக சேதமடைந்துள்ளதாக பலஸ்தீன வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஆனால் இந்தவார்ப்பு தொழிற்சாலையை ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு பயன் படுத்துவதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது.

# போலந்து முன்னாள் துணை சனாதிபதி வேகக்கட்டுப்பாட்டை மீறியதால் அபராதம்

போலந்தில் வேகக் கட்டுப்பாட்டை மீறிய போலந்தின் முன்னாள் துணை சனாதிபதிக்குப் பொலிசார் அபராதம் விதித்தனர். போலந்தில் உள்ள ஒரிகான் பகுதியில் முன்னாள் துணை சனாதிபதி அல்கோரே தனது குடும்பத்தினருடன் அங்குள்ள சுற்றுலா நகருக்கு காரில் சென்று கொண்டிருந்தார். மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் காரை ஓட்டிச்சென்றார். அப்போது பொலிசார் அவரை மடக்கிப்பிடித்தார்கள்.

இதனைத்தொடர்ந்து அவருக்கு ரூ.7,050 அபராதம் விதித்து பொலிசார் துண்டுப்பிரசுரம் கொடுத்தனர்.

# மலேசிய அமெ. தூதரகம் மூடப்பட்டது: கடிதஉறையில் மர்மப்பொடி வந்ததாம்

(கோலாம்பூர்)

மலேசியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு வியாழக்கிழமை வந்த ஒரு அஞ்சல் உறையில் மர்மப்பொடி அடங்கியிருந்தது. இதையடுத்து தூதரகம் உடனடியாக மூடப்பட்டது.

தீங்கு விளைவிக்கும் பொருட்கள் ஆய்வுக்கான மலேசிய நிபுணர்கள், மர்மப்பொடியை ஆய்வு செய்து வருகிறார்கள் என அமெரிக்கத் தூதரக செய்தித் தொடர்பாளர் பிராங்க் விடேகர் கூறினார்.

கடந்த இரு வாரங்களில் அமெரிக்கத் தூதரகத்துக்கு அஞ்சலில் மர்மப் பொடி வருவது இது இரண்டாவது முறை.

அஞ்சலில் மஞ்சள் நிறப் பொடியும், ஈராக்கில் இருந்து அமெரிக்கா வெளியேறாவிட்டால் தூதரகத்தைத் தகர்ப்போம் என்ற மிரட்டல் கடிதமும் அனுப்பப்பட்டிருந்தன. அந்தப்பொடி ஆந்த்ராக்ஸ் அல்ல என்பது அப்போது ஆய்வில் கண்டறியப்பட்டது.



சூடானின் சர்ச்சைக்குரிய பிரதேசத்தில் ஆயுதக்குழுவினர்.

# கிளி.மாவட்ட மாதிரி வீட்டுத் திட்டத்தை உலக வங்கியின் ஆலோசகர் பார்வை

## -செயற்பாடுகளில் முன்னேற்றம் குறித்தும் திருப்தி

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் வட கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாண திட்டத்தின் கீழ் செயற்பட்டுவரும் மாதிரி வீட்டுத்திட்டத்தினை உலக வங்கியின் ஆலோசகர் நேரில் பார்வையிட்டுள்ளார்.**

கடந்த 3,4ஆம் திகதிகளில் கரைச்சி,பூநகரி,பளை பிரதேச செயலர் பிரிவுகளில் முதற்கட்ட மாகச் செயற்படுத்தப்படும் நூறு மாதிரி வீட்டுத்திட்டங்களை உலக வங்கியின் ஆலோசகர் எடன் நாராயணன் நேரில்பார்வையிட்டார்.

நேற்று முன்தினம் கரைச்சிப்பிரதேசத்தில் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தம், திட்டப்பணிப்பாளர் சிறிகாந்தவேல், வீட்டுத்திட்ட இணைப்பாளர் அ.கேதீஸ்வரன்,கரைச்சிப்பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் ஸ்ரீரெங்கநாதன் ஆகியோரைச் சந்தித்து வீட்டுத்திட்ட செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடியதுடன் வீட்டுத்திட்ட செயற்பாட்டு முன்னேற்றம் குறித்து உலகவங்கி ஆலோசகர் திருப்தி தெரிவித்துள்ளார்.முன்னதாக உலகவங்கி ஆலோசகர் தமிழர் புனர் வாழ்வுக் கழக தலைமைப்பணிமணைக்கு விஜயம்மேற்கொண்டு தமிழர்புனர் வாழ்வுக்கழகப்பணிப்பாளர் றெஜி, திட்டப்பணிப்பாளர் லோரன்ஸ் திலகர், நிர்மாணப் பகுதியைச் சேர்ந்த சுபர் ஆகியோரைச



சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.நூறு மாதிரி வீட்டுத் திட்டத்தில் 25 வீடுகளைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# பூநகரிப் பிரதேசத்திற்கு உட்பட்ட கிராம மக்களின் ஒன்று கூடல்

## எதிர்கால திட்டங்கள் குறித்து ஆராய்வு

பூநகரி கௌதாரி முனைக் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கடற்புலிகளின் பூநகரிப் பிரதேசப் பொறுப்பாளர் தலைமையில் கடந்த 3ஆம் திகதி அபிவிருத்தி சம்பந்தமானகூட்டம் இடம் பெற்றது. பரமன் கிராய், வில்லடி, வெட்டுக்காடு, கௌதாரிமுனை, மினாசி ஓடை,கல்முனை, மண்ணித்தலை ஆகிய கிராமங்களில் இருந்துமக்கள் கலந்துகொண்டதுடன் கடற்புலிகளின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளரும் கலந்து கொண்டு கிராமமக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்ததுடன் பரமன்கிராயில் இருந்து கௌதாரி முனை வரையிலான வீதியைத் திருத்தி அமைப்பதெனவும், மக்களால் தீர்மானித்து நிறைவேற்றப்பட்டது.

பாடசாலை வேலிகள் அமைக்கப் படவேண்டுமெனவும் அதற் கிணங்க குழுக்கள் அமைத்து எதிர்வரும் திங்கட்கிழமை வேலைகளைச் செய்வதெனவும் சிகைஅலங்கரிப்பு நிலையம் இரண்டு அமைக்கப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டு இதன் பின்பு கூட்டம் இனிது நிறை வெய்தியது.

# பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிப் பிரதேச முன்பள்ளிகளின் ஆக்கப் பொருள் கண்காட்சி நேற்று முன்தினம் கிளிநொச்சி அகதிகள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தில் நடைபெற்றது.

நெக்றோ இணைப்பாளர் நேசன் நித்தியானந்தம், நெற்றோ நிறுவன இணைப்பாளர் நேசன், கிளி. முன்பள்ளி கல்வி மேம்பாட்டுத் தலைவர் சிவநாதன் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து முன்பள்ளிகளின் ஆக்கப் பொருள் கண்காட்சியினை கிளிநொச்சி முன்பள்ளி கல்வி மேம்பாட்டுத் தலைவர் சிவநாதன் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.



சிறார்களின் வரவேற்பு

தலைமையில் நடைபெற்ற கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் விருந்தினர்கள் நிறுவன முன்றலிலிருந்து தென்னிந்திய திருச்சபை முன்பள்ளி சிறார்களின் வரவேற்பு நடனத்துடன் மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் நிருபன் ஏற்றிவைத்தார். அடுத்து நிறுவனக் கொடிகள் ஏற்றிவைக்கப் பெற்றது. தலைமையுரையினை யடுத்து சிறப்புரையினைக் கரைச்சிப் பிரதேச செயலர் பொன்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், நிறுவனப் பிரதிநிதிகள் பெருமளவில் மேற்படி கண்காட்சியினைப் பார்வையிட்டு சென்றதனைக் காணக்கூடியதாக விருந்தது.இதேவேளை, ஒட்டுசுட்டான் கோட்ட மட்டத்திலான முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சி கடந்த 2ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடாத்தப் பட்டது. துணுக்காய் வலய முன்பள்ளி கல்விப் பணிப்பாளர் செல்வி. கு. கிருபரஞ்சினி தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் மா.தெய்வேந்திரம், உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.ஜெயசபாபதி, முல்லை கிராமஅபிவிருத்தி சங்கங்களின் பொறுப்பாளர் ஈழவன் ஆகியோர் ஏற்ற, தேசியக் கொடியினை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரம் ஏற்றினர். தொடர்ந்து ஏனைய கொடிகளை ஒவ்வொரு பிரதிநிதிகளும் ஏற்றினர்.கண்காட்சி மண்படத்தினை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் பங்கயற்செல்வன் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.தமிழர்புனர் வாழ்வுக்கழக அனுசரணையுடன், முல்லை கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடனும முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தாலும் நடாத்தப்பட்டது. இதில் 17 முன்பள்ளிகள் பங்கு பற்றின. (சோ,கு,05)

# மின்சார விநியோகத்திற்கு புதுக்குடியிருப்பில் நடவடிக்கை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் இடம் பெற்று வருவதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ. தயானந்தா தெரிவித்தார்.

ஆரம்பகட்டமாக இம்மின் வழங்கலானது ஒட்டுசுட்டான் வீதியில் ஐயன் கோவிலடி வரையும், பரந்தன் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மைதானம் வரையும், முல்லை வீதியில் குழந்தை யேசு ஆலயம் வரையும் , மாத்தளன் வீதியில் டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனைவரையும் இம் மின்சாரம் வழங்கப்படும் எனக்குறிப்பிட்ட அவர் பின்னர் இம் மின்சாரமானது விரிவாக்கமடைந்து அனைவருக்கும் கிடைக்கும் முறையில் வேலைகள் இடம் பெறுமெனவும் அவர் குறிப்பிட்டார். (08)

# தையல் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கல் நிகழ்வும்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரின் தையல் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.



மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை கிளி. மாவட்ட நிர்வாக சேவை நிர்வாக அலுவலர் ராம்கீ, செஞ்சிலுவைச் சங்கப் பிரதேச தலைவர்கள் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை கிளி. மாவட்ட நிர்வாக சேவைத் துணைப் பொறுப்பாளர் ராதை ஏற்றி வைத்தார்.

தையல் பயிற்சி கண்காட்சியினை கரைச்சிப் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தம் நாடா வினை வெட்டித்திறந்து வைத்தார். இந் நிகழ்வில் கிளி. மாவட்ட செஞ்சிலுவைச்சங்கத் செயலர் கணேஸ் மற்றும் பிரதேச சங்கத்தலைவர்கள் கலந்து நிகழ்வினை சிறப்பித்ததுடன் ,தையல் பயிற்சியினை நிறைவு செய்த மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கிக்கௌரவித்தனர். கிளிநொச்சி மாவட்ட பூநகரி, கரைச்சிப்பிரதேச செஞ்சிலுவைச் சங்க தையல்நிலையங்களில் தயாரிக்கப்பெற்ற ஆடைகள் இக் கண்காட்சியில் வைக்கப்பெற்றிருந்தமைகுறிப்பிடத்தக்கது.(சோ,கு)

# திருவையாறுப் பகுதியில் கட்டாக்காலிகள் தொல்லை

(கிளிநொச்சி)

திருவையாறுப் பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை வெகுவாக அதிகரித்துள்ளது. விவசாய நடவடிக்கைகளைப் பெருமளவில் விவசாயிகள் மேற் கொண்டுவரும் இப் பகுதியில் இவ்வாறு கால்நடைகளின் தொல்லை களால் தொடர்ச்சியாக இழப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட வர்கள் உரிய கவனம் எடுக்குமாறு பொதுமக்கள வேண்டியுள்ளனர். (15)

# பாலம் கட்டுமாணப்பணி தாமதத்தால் அசௌகரியம்

வற்றாப்பளை வீதியில் அமைந்துள்ள கேப்பாப்புலவு பாலம் கட்டுமாணவேலைகள் இன்னமும் முடியவில்லை.

3 பாலங்களைக் கட்டுவதற்காக வீதி புனரமைப்பு இடைநிறுத்தப் பட்டுள்ளதால் இவ்வீதியால் பயணிப்போர் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. (20)

# போதைப் பொருட் பாவனை அக்கரைப்பற்றில் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் போதைப் பொருட்பாவனை அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அக்கரைப்பற்று சிறிலங்காப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முஹாரி கூறியுள்ளார்.கடந்த புதன் கிழமை சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தியதில் கஞ்சாப் பாவனையிலீடுபட்ட ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த மாதம் கஞ்சாப் பாவனை தொடர்பாக 71 சம்பவங்கள் பொலிசாரால் பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடகுச் சேவை மீண்டும் ஆரம்பம்

முருங்கன் மக்கள்வங்கிக் கிளையில்கடந்த19 வருடங்களுக்குப்பின் நகைஅடகு பிடிக்கும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை முன் னிட்டு வைபவம் அண்மையில் இடம்பெற்றது. (மி)

## மகாகும்பாபிஷேகம்

பதினோராம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழ மன்னனால் நிர்மாணிக்கப்பட்டு சதுர்வேத மங்கலம் என்றழைக்கப்பட்ட கந்தளாய்-பேராறு சிவன்கோயிலின் மகாகும்பாபிஷேகம் கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.30-9.30 மணிக்கும் இடைப்பட்ட சுப வேளையில் நடந்தேறியது.

திருகோணமலை அருள்மிகு ஸ்ரீபத்திர காளியம்பாள் ஆலய ஆதினகர்த்தா வேதாகமமாணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் பிரதிஷ்டா பிரதமக் குருக்களாக இருந்து கும்பாபிஷேகத்தை பக்தி பூர்வமாக நடத்தி வைத்தார். (25)

# கைப்பற்றப்பட்ட இந்திய இழுவைப்படகுகளில் ஒரு தொகுதி சிறிலங்காப் படையின் பாவனையில்

**இலங்கைக் கடற்பகுதியில் அத்துமீறிப் பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் சிறிலங்காக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களது இழுவைப்படகுகளில் ஒரு தொகுதியினை இலங்கை கடற்படை தனது பயன்பாட்டிற்கெனப் பெற்றுக்கொண்டுள்ளது.**

கடற்படைத் தளபதியினால் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சிற்கு விடுக்கப்பட்ட கோரிக்கையினையடுத்தே இவ் இழுவைப்படகுகள் கடற்படையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை கடற்படைத்தளத்தின் இறங்கு துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இழுவைப்படகுகளில் இயங்கு நிலையிலுள்ள ஆறு படகுகளை மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் யாழ். அலுவலக அதிகாரிகள் தலைமையகத்திலிருந்து கிடைத்த உத்தரவின் பேரில் கடற்படையிடம் கையளித்துள்ளனர்.

இதனிடையே எஞ்சியுள்ள மீன் பிடி இழுவைப் படகுகளில் தகுதியான நிலுவையிலுள்ளவற்றை தீவகத்தின் பயணிகள் போக்குவரத்திற்கென கையளிக்கப்பட்டுள்ளது. உரிய திருத்த வேலைகளை மேற்கொண்ட பின் பயணிகள் போக்குவரத்திற்கு இப்படகுகள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக கடந்த வெள்ளிக்கிழமையன்று யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனிடம் கையளித்துள்ளார். இந்நான்கு படகுகளையும் தீவுப்பகுதியில் நிலவிவரும் கடற்போக்குவரத்து சிரமங்களை சீர்செய்ய ஏதுவாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு வழங்கியுள்ளது. (27)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேசத்திற்கான ஒழுங்கிணைப்பு குழுக்கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளது. இதில் வலி. மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாக ஆராயப்பட்டு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன. (33)

## இருபாலையில் வாகன விபத்து வயோதிபர் தலைசிதறிப் பலி

பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்திக்கருகாமையில் சிற்றூர்தி மோதி அவ்விடத்திலேயே ஒருவர் தலை சிதறிப் பலியானார். கோப்பாய் தெற்கு-இருபாலையைச் சேர்ந்த மாணிக்கம் சின்னப்பா (வயது 68) என்ற வயோதிபரே பலியானவராவார்.. இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது நேற்று முன்தினம் மாலை5 மணியளவில் பருத்தித்துறை வீதியில் திருமண நிகழ்வில் கலந்துவிட்டு வந்த இரு காரும், சிற்றூர்தியும் போட்டிக்கு ஓடியபோது இருபாலைச் சந்திக்கருகில் இந்நபரை சிற்றூர்தி மோதிவிட்டு, அவ்விடத்தில் வாகனத்தைவிட்டுச் சாரதி ஒடித் தலைமறைவாகி விட்டார். அவ்விடத்தில் நின்ற வாகனத்தை இறந்தவரின் உறவினர்கள் தாக்கிச் சேதப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து இருபாலை இளைஞர்களும், டச்சு வீதி இளைஞர்களும் மோதிக்கொண்டனர். இதில் இருபாலையைச் சேர்ந்த பாபு என்பவர் காயமடைந்தார்.

## அடிப்படை வசதிகளின்றி ஒரு வைத்தியருடன் இயங்கி வரும் நெடுந்தீவு வைத்தியசாலை

நெடுந்தீவு மாவட்டவைத்தியசாலை எவ்வித அடிப்படை வசதிகள் இன்றி ஒரு வைத்தியரும், ஒரு மகப்பேற்று மருத்துவ தாதியுடனும் இயங்கிவருகிறது. இதனால் நோயாளர்கள் பல சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.

இந்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் மலசலகூடவசதிகள் இல்லாமலும், மகப்பேற்றுக்கான கட்டடங்கள் உடைந்த நிலையிலும் மகப்பேற்றுக்கான உபகரணம் இல்லாமலும் இயங்கி வருகின்றது.

இந்த வைத்தியசாலையில் பணி புரிய 50பேர் கொண்ட ஆளணிக்குப் பதிலாக 18பேர் மட்டும் கடமைபுரிந்து வருகின்றனர். பற்சிகிச்சை நிலையம் இருந்தும் வைத்தியர் இல்லை, 3பேர் கொண்ட மகப்பேற்று மருத்துவ மாதுவுக்கு ஒருவர் மட்டும் சேவை புரிவதால் நோயாளர்கள் கடல் கடந்து நீண்ட தூரம் கொண்ட யாழ்.நகருக்கு பல சிரமங்களுக்கு மத்தியில் செல்கின்றனர்.

இவ் வைத்தியசாலைக்கு வைத்தியர்களை நியமிப்பதோடு அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்கப்படவேண்டும். இவ் வைத்தியசாலையை மேலும் விஸ்தீரணம் கொண்டதாகவும், வெளிநோயாளர் பிரிவில் தங்கும் மண்டபம் ஆரம்ப சுகாதார நிலையம் மேலதிக வைத்தியர் தங்கு விடுதி, குடும்பநலசேவை உத்தி யோகத்தர்கள் விடுதி தாதிகள் விடுதி, மகப்பேற்று மருத்துவமனை என்பன நிர்மாணிக்கப்பட வேண்டும் என நெடுந்தீவு மக்கள் கேட்கின்றனர். (24)

## பயன்தரு மரங்கள் படையினரால் அழிப்பு மாதகல் மேற்கு மக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாதகல் மேற்குப் பகுதிகளில் உள்ள இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயங்களால் உள்வாங்கப்பட்டுள்ள தனியார் காணிகளில் இருந்து சிறிலங்காப் படையினர் பயன் தரு பனை, தென்னை மரங்களைத் தறிப்பதாக அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு தனியார் காணிகளிலிருந்து தறிக்கப்படும் பனை,தென்னை மரங்களைக் குற்றிகளாக்கி அவற்றை இராணுவ வாகனங்களில் ஏற்றிச் சென்று தமது படைமுகாம்களையும், காவலரண்களையும் பலப்படுத்துவதற்காகப் பயன்படுத்தி வருவதாக மேலும் குற்றஞ் சாட்டியுள்ள மக்கள்.

பொறுப்புணர்வற்ற வகையில் பனை,தென்னை மரங்களைத் தறிக்கும் படையினரது செயற்பாடுகள் நிறுத்தப்படல் வேண்டும் எனவும் கோரியுள்ளனர். (33)

## தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் இன்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் கோவில் வீதியில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

தமிழ் மாணவர்களின் கல்வி மற்றும் சமூக மேம்படுத்தல் என்பவற்றை மையமாகக்கொண்டு செயற்பட்டு வருவதுடன் தமிழ் மாணவர்களுக்குள்ள உரிமைகளை பல்வேறுமட்டங்களிலும் வலியுறுத்திச் செயற்பட்டுவரும் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ். அலுவலகத் திறப்புவிழாவில் யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் சு.மோகனதாஸ், யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி உள்ளிட்டோர் விருந்திரனராகக் கலந்துகொள்ளவுள்ளனர். (33)

## தியாகி திலீபனின் 17 ஆவது நினைவு நாளையொட்டி யாழ்.ப.நோ.கூ.சங்க அங்கத்தவர்களிடையே போட்டி

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்.கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி யாழ்ப்பாணப் பல நோக்குக் கூட்டுறவு சங்கம் தனது அங்கத்தவர்களிடையே பல்வேறு போட்டிகளையும் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கவிதை கட்டுரை, பேச்சு, நாடகம், பட்டிமன்றம் போன்ற தேச விடுதலை அம்சங்களுடன் கூடிய போட்டிகளை யாழ்ப்பாணக் கூட்டுறவுச்சங்கம் நடத்தவுள்ளது.

தியாகி லெப். கேணல் திலீபனின் 17ஆவது ஆண்டு நினைவு தினத்தை யாழ். குடாநாடெங்கும் மிக் உணர்வெழுச்சியுடன் கடைப் பிடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

அந்த வகையில் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரையில் தியாகி திலீபனின் விசேட அஞ்சலி நிகழ்வுகள் யாழ். குடாநாட்டிலுள்ள வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் மிகச் சிறப்பாக இடம்பெறும். அத்துடன் தியாகி திலீபன் உண்ணா விரதமிருந்து வீரச்சாவடைந்த நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் விசேட அஞ் சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (33)

## பொது மண்டபத் திறப்புவிழா வரும் 10 ஆம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

நிகொட் திட்டத்தின் நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் யாழ்.கரவெட்டியில் உள்ள ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் பொது மண்டபம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச வாழ்மக்களின் சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு நிறுவப்பட்டுள்ள இப்பொது மண்டபத்தின் திறப்பு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, நிகொட் திட்டப்பணிப்பாளர் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (33)

## யாழ்.தீவகத்தை இணைக்கும் பண்ணை வீதியின் நிலை மோசம்

### பயணிகள் அசௌகரியம்

(தீவகம்)

யாழ்ப்பாணத்தையும்-தீவகத்தையும் இணைக்கும் பண்ணைப் பாலத்தையும், அதனை அண்டிய பகுதிகளிலுமமுள்ள வீதிகள் மிக நீண்ட காலமாகத் திருத்தப்படாது சேதமடைந்து போயுள்ளன.

பாரிய குன்றுகுழிகள் நிறைந்ததாகக் காணப்படுவதால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இதுகுறித்துப் பல தரப்பிடமும் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

## யாழ். வீராங்கனைகளின் திறமையை மேம்படுத்துவதில் அரசு பாராமுகம்

### விளையாட்டு அதிகாரி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரவீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்தக்கூடியளவில் விளையாட்டுப் பயிற்சிகளை வழங்குவதற்கு உரிய தளபாட மற்றும் உபகரண வசதிகள் இல்லாது இருப்பதாக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பதிகாரி றொகான் ராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக யாழ். மாவட்டத்திலுள்ள வீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்த முடியாத சூழ்நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள அவர் இது விடயத்தில் அரசாங்கம் பாராமுகமாக இருந்து வருவதாகவும் தெரிவித்தார். (33)

## ஒளிராத வீதி விளக்குகள்

யாழ். கொழும்புத்துறை கடற்கரை வீதியில் உள்ள வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை. இதனால், இரவு நேரங்களில் அவ் வீதி யால் பயணிப்போர் திருடர்கள் மற்றும் விசமிகளின் அச்சுறுத்தல்களுக்கு ஆளாக வேண்டியுள்ளதாக மக்கள் முறையிட்டுள்ளனர். (33)




## நெடுந்தீவு பிரதேச தே.எ.பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு

நெடுந்தீவுப் பிரதேசத்தில் தேசிய எழுச்சிப் பேரவை மாதாந்த சங்கம நிகழ்வும், செயலகத் திறப்புவிழா நிகழ்வும், நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவை மண்டபத்தில் கடந்த 31.08.2004 காலை 10.00 மணிக்கு தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் S.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரினை தீவகச் சிறப்புப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் ஏற்றி வைத்தார். மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

அகவணக்கத்தைத் தொடர்ந்து தேசிய எழுச்சிப்பேரவையின் பெயர்ப் பலகையினை தென்னிந்திய திருச்சபை போதகர் ஜோன் செல்வம் திரை நீக்கம் செய்து வைத்தார். அலுவலக கட்டடத்தை நெடுந்தீவுப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் திறந்து வைத்தார்.

கருத்துகளை நெடுந்தீவு பிரதேச செயலர் பேரானந்தம், சி.அந்தோனிப்பிள்ளை தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கனகலிங்கம் ஆகியோர் வழங்க, சிறப்புரையை யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ். மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் அருணன் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொது மக்கள், போராளிகள் பலர் கலந்து கொண்டனர்.(24)



# நவீன வேளாண் முறைகளை எடுத்தியம்பிய கண்காட்சி

காலம் காலமாக சிறிலங்கா அரசாங்கம் தமிழ்மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நோக்கில் தமிழர்களின் கல்விக்குத் தடை விதித்ததோடு கடுமையான போர் நிகழ்ந்த மிகநீண்ட காலப்பகுதிக்குள் தமிழர்களின் அன்றாட வாழ்வைச் சீரழிக்கும் எண்ணத்தோடு பொருளாதாரத்தடையை விதித்திருந்தது. இதனால் தமிழர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுமெனக் கனவுகண்ட அரசாங்கத்திற்கு தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் எழுச்சிகரமான செயற்பாடுகள் அன்று தொட்டு இன்று வரை பின்னடைவுகளையே ஏற்படுத்தி வருகின்றது. அதனடிப்படையில் போரின் தாக்கத்தால் பல அறிவியற் றொழில் நுட்பங்களையோ, புதிய முறைவிவசாயச் செய்கைகளையோ அறிந்திராத தமிழ் மக்களுக்குத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட விவசாயக் கண்காட்சி பெரிதும் பயனுடையதாகவே அமைந்தது. அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பல்வேறு விவசாயக் கருவிகள் உற்பத்தி நிறுவனங்களின் நவீனரகச் செயற்பாட்டுக் கருவிகளைப் பயன்படுத்தினால் எந்தளவு பயனைப் பெறலாம் என்பதையும் இதனால் விவசாயம் பெரிதும் விருத்தியடையும் என்பதையும் மக்கள் உணர்ந்தனர். அத்தோடு தமிழீழத்தின் மிகப்பெரும் வளமாக அடிக்கடி எதிரியின் கண்மூடித்தனமான தாக்குதல்களால் அழிவடைந்து போய்க் கொண்டிருப்பதுமான பனை வளத்தினைப் பயன்படுத்தி அதிலிருந்து பெறப்படும் கழிவுப்பொருட்களால் கூட எந்தளவுக்குப் பயன்பெற முடியுமென்பதைத் தெட்டத் தெளிவாக விளக்கப்பட்டிருந்தது. இதே வேளை விவசாயத் திணைக்களத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்டகாட்சிகளில் குறுகிய காலத்தில் பயனைத்தரக்கூடியவையும், குறுகிய நிலப்பரப்பில் பயிரிட்டுப் பெரும் வருமானத்தைப் பெறக்கூடியதுமான பயிர்ச் செய்கை முறைகள் மிகவும் பயன்தரக் கூடியவையாகவே மக்களுக்கு அமைந்திருக்கும். தமிழீழத்தில் அரிதாகிப் போய் கொண்டிருக்கும் வளமான நீர்வளத்தினைச் சரியான முறையிலும், விரையமாகாத முறையிலும், குறைந்தளவு நீரைப்பயன்படுத்தி அதிகளவான பயிர்களை எவ்வாறு பயிரிடமுடியுமென்பதையும் மிகத்தெளிவாகச் செய்கைமூலம் மக்களுக்கு விளக்கப்பட்டதோடு அதனை மேற்கொள்வதால் ஏற்படும் நன்மைகளையும், மக்கள் உணரக் கூடியதாகவிருந்தது. அத்தோடு பயிர்களைப் பதிவைக்கும் முறையும், அவற்றைப் பாதுகாக்கும் முறைகளும், விவசாயிகளுக்கு மட்டுமன்றி பாடசாலை மாணவர்களுக்கும் கூட பயனுடையதாகவிருந்தது. விலங்குவேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதியரக பசுக்கள், பறவையினங்கள், காளைகள், ஆடுகள் எனப் புதுப்புது இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தோடு விலங்குகளுக்கு ஏற்படுகின்ற நோய்கள் அதற்கான குணங்குறிகள் என்பன மட்டுமன்றி அவற்றைக் குணப்படுத்துவதற்கான வழிமுறைகளும் விளக்கப்பட்டன. தமிழ் விவசாயிகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விவசாய உபகரணங்கள் விவசாயச் செய்கையின் போதும் அவற்றை அறுவடை செய்கின்ற போதும், குறுகிய காலத்தில்பயன்படுத்திக் குறைந்தளவு ஆட்களுடன் விதைப்பதையோ அல்லது அறுவடையையோ மேற்கொள்ளக்கூடிய வகையில் புதிய கருவிகள் இங்கே அறிமுகமாக்கப்பட்டிருந்தது.

அத்தோடு யாழ். பல்கலைகழக விவசாய பீட மாணவர்கள் பலவகையான மீனினங்களையும், அவற்றை உற்பத்தி செய்யும் முறைகளையும் மக்களுக்கும், மாணவர்களுக்கும் விளங்கங்களோடு செய்முறைகளின் மூலம் தெளிவாகக் காட்டினார்கள். இறால் வளர்ப்பு, நன்நீர் மீன் வளர்ப்பு என்பனபற்றி மீன்பிடியில் ஈடுபடும் எமது மக்களுக்குப் பெரிதும் பயனுடையதாக அமைந்திருக்கும். இவ்வாறான ஒவ்வொரு தொழிலில் ஈடுபடுகின்ற ஒவ்வொருவருக்கும் மிகவும் தமது தொழிலை மேம்படுத்துவதற்கு ஊக்கமளிப்பதாகவே அமைந்ததெனலாம்.



இக்கண்காட்சியைத் தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து மக்கள் அணி அணியாக வருகை தந்து மிகவும் ஆர்வத்துடனும், மகிழ்ச்சியுடனும் பார்வையிட்டனர்.

இவ்வாறு தமிழீழத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டும் தன் நிறைவான பொருளாதாரத்தை மக்கள் தாமே உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்ற நோக்குடனும், இயங்கிவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினதும், அதனோடிணைந்த விவசாயத் திணைக்களம், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், கமநல சேவைத்திணைக்களம், சிறுகைத்தொழில் திணைக்களம், யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடம், கிளிநொச்சி அரச அதிபர், கமக்கார அமைப்புக்கள் ஆகியனவும் ஒழுங்கமைத்த இக்கண்காட்சியில் தென்பகுதியைச் சார்ந்த விவசாயம், கைத்தொழில் சார்ந்த நிறுவனங்கள், திருகோணமலையிலிருந்து வருகைதந்த பனம்பொருள் உற்பத்தி நிறுவனங்கள், யாழ்.மாவட்டத்திலிருந்து வருகைதந்த மரசிற்பவேலை உற்பத்தி நிறுவனங்கள், திருகோணமலையிலிருந்து வருகைதந்த கால்நடை உற்பத்தி நிறுவனங்கள், ஏனைய மாவட்டங்களிலிருந்து வருகைதந்த கால்நடை உற்பத்தி நிறுவனங்கள் எனப் பலவகை நிறுவனங்களும், திணைக்களங்களும் பொருட்களைக் காட்சிக்கு வைத்திருந்தன. இவ்வாறு தமிழீழ, தென்பகுதி விவசாயம் சார்ந்த அமைப்புக்கள் ஒருங்கிணைந்து நடாத்திய இம்மாபெரும் கண்காட்சியை பார்வையிட்டு மிகவும் உட்சாகத்துடன் காணப்பட்ட கறுப்பையா எனும் விவசாயி கண்காட்சியைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார். "இந்தக் கண்காட்சி எம்மைப் போன்ற விவசாயிகளுக்கு மிகவும் பயனுடையதாகவே அமைந்திருக்கும். சிறிலங்கா அரசாங்கம் பொருளாதாரத் தடை விதித்திருந்த காலப் பகுதியில் நாங்கள் பல இயற்கை வளமாக்கிகளையும், பாரம்பரியகளை கட்டுப்படுத்தும் முறைகளையே கையாண்டு வந்தோம். ஆனாலும், இன்றைய கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள விவசாயச் செய்கை முறைகளை நாங்கள் அறிந்திருக்கவில்லை. இவ்வாறான ஒரு கண்காட்சி அந்தக் காலப் பகுதியில் நடைபெற்றிருக்குமானால், நாம் மேலும் உற்பத்தியைப் பெருக்கக்கூடியதாக இருந்திருக்கும். அத்தோடு, இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட நெல் இனங்களைப் பயிரிடுவதற்கு எமக்கு விதை நெல்லினை பொருண்மியத்தினால் வழங்குவார்களேயானால் நாம் அவற்றை விதைத்து கூடிய பயனைப் பெறலாம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட சூடடிப்பு மற்றும் அரிவி வெட்டும் கருவிகள் எமக்கு மிகுந்த பயனைத் தரும் என நினைக்கின்றேன். ஏனெனில், தற்போது வேலையாட்களின் சம்பளம் அதிகரித்துக் காணப்படும் அதேவேளை, கூலியாட்களின் தொகையும் குறைவாக இருப்பதனால், இது எமது பகுதிக்கு மிகவும் ஏற்றமுறையாகவே அமைந்துள்ளது. எனவே, இவ்வாறானதொரு கண்காட்சியை ஒழுங்கமைத்த தமிழீழ பொருண்மியத்தாருக்கு தமிழீழ விவசாயிகள் அனைவருமே நன்றிக் கடன் பட்டவர்களாவோம்" என்றார்.

இக்கண்காட்சியினை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் அணிவகுத்து வந்து பார்வையிட்டனர். அதனைப் பார்த்த



களிப்பில் மாணவர்களுடன் இதன் பயன்பாடு பற்றி கலந்துரையாக்கொண்டிருந்த விசுவமடு பிரமந்தனாறு மகாவித்தியா லய ஆசிரியர் சிவரூபன் அவர்கள் "இக்கண்காட்சியானது மாணவர்களுக்கு மிகவும் பயனுடையது. நாங்கள் சற்றுமே எதிர்பார்க்காத விதமாக இக்கண்காட்சி அமைந்திருந்தது. சிறிலங்கா அரசின் திட்டமிட்ட அடக்குமுறைகளின் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலைப் பயன்படுத்தி செய்யப்பட்ட வேலைத்திட்டங்களில் மிகவும் பயனுடைய செயற்பாடாக இது அமைந்துள்ளது. அரசாங்கம் தமிழ் மாணவர்களின் கல்விக்கு வேட்டுவைக்கமுனைந்து கொண்டிருக்கும்

**இ. சசிக்குமார்**

இந்தக் காலத்தில் அதனை முறியடிக்கும் பல செயற்பாடுகளில் இக்கண்காட்சியும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகவே அமையும். மேலும் எமது பகுதியில் இவ்வளவு பிரமாண்டமான கண்காட்சி நடைபெறும் என யாருமே எதிர்பார்க்காத நிலையில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட இச்செயற்பாடு மாணவர்களுக்கும் எமது மக்களுக்கும் மிகவும் பயனுடையதாகவே அமைந்தது" எனக் கூறினார்.

இதனைப் பார்வையிட்ட வட்டக்கச்சி மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன் டேவிட் பாஸ்கரன் டினேஸ் என்பவர் இக்கண்காட்சி பற்றிக் கூறுகையில், " இது மாணவர்களுக்கு மிகவும் பயனுடையதாக இருந்தது. நாங்கள வீடுகளிலே பொழுது போக்காகவே வீட்டுத் தோட்டங்களை அமைக்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டோம். மாணவர்களைப் பொறுத்த





வரை இது வரை கண்டிராத புதிய ரக இயந்திர சதானங்கள் அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டி ருந்தன. அவ ற்றை எதற்குப் பயன்படுத்துவது என்பது கூட தெரியாத எமக்குத் தெளிவான விளங்கங்கள் வழங்கப்பட்டன. இக்கண்காட்சி விவசாயப் பாடத்தினை கற்கும் மாணவர்களின் பரீட்சைக்கு மிகவும் பயனுடையது. அத்தோடு, அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் மிக மிகத் தரமான முறையிலும், நவீன பயிர்ச் செற்கை முறைகளையும் அறிமுகப்படுத்தினார்கள். விலங்கு வேளாண்மைப் பகுதியினர் புல் அரிதான காலத்திலும் பசுக்களில் இருந்து அதிக பாலைப் பெற வைக்கோலுடன் கல்சியத்தைச் சேர்த்து பசுவிற்குக் கொடுத்தால் அதிக பாலைப் பெறமுடியும் என்பதை தெளிவாக விளக்கினார்கள். சிறிலங்கா அரசாங்கத்தின் பல சவால்களுக்கு முகம் கொடுத்துவரும் எமது மாணவ சமூதாயத்திற்கும் ஏனைய சமூகத்தினருக்கும் மேலும் உற்சாகத்தை ஊட்டும் வகையில் இக்கண்காட்சி அமைந்திருந்தது" எனக் கூறினார்.

ஒட்டுமொத்தத்தில் இக்கண்காட்சியானது



அனைத்து சமூகத்தினருக்கும் மிகவும் பயனுடையதாக அமைந்தது மட்டுமன்றி இனிவரும் காலங்களிலும் சிறிலங்கா அரசாங்கம் தமிழர்கள் மீது போரைத் திணித்து பொருளாதாரத்தை முடக்கும் நிலை தோன்றினாலும் தமிழர்கள் ஒவ்வொருவரையும் சொந்தக் காலிலே நிற்க வைப்பது மட்டுமன்றி தமக்குத் தேவையான பொருளாதாரத்தை தாமே ஈட்டிக் கொள்ளக்கூடிய வகையில் அமைந்ததோடு சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஒரு சவாலாகவுமே அமைந்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

# வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்

## தேர்த் திருவிழா சிறப்பிதழ் - 06-09-2004


**அருநிலா அழகுசாதன வாணிபம்**

அழகு சாதனப் பொருட்கள், எரிபொருள்,
உதிரிப்பாக விற்பனையாளர்.

221 சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி

(சி-10381)

**கதிர் மூக்குக்கண்ணாடி அகம்**

(அமல் பல், மூக்குக்கண்ணாடி அகம்)

யாழ்சாலை, கிளிநொச்சி

கிளை-பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு

T.P.021-2285748

(சி-10382)

**சிவா வர்த்தக நிலையம்**

பல் பொருள் மொத்த, சில்லறை
விற்பனையாளர்கள்

யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-10383)

**வீ. எரிபொருள், உதிரிகள்**
**வேளாண்பொருள் வாணிபம்**

விநாயகர் களஞ்சியம்

இல.449, 6 ஆம் யூனிற், இராமநாதபுரம்

(சி-10384)

**புண்ணியம்**
**பல் பொருள் வாணிபம்**

பல்பொருள், எரிபொருள்
விற்பனையாளர்

இல 100 கட்சன் வீதி, வட்டக்கச்சி

(சி-10385)

**கண்ணபிரான் பல்பொருள் வாணிபம்**

**பல்பொருள் வாணிபம்**

அங்காடி உட்புறம், வட்டக்கச்சி.

(சி-10386)

உரிமையாளர்-ஏ.பிரபாகரன்

**ஜனவி சாரதிப் பயிற்சி நிலையம்**

*ஒரு மாத காலத்தில் சகல வகையான வாகனங்களை
செலுத்துவதற்கும் பயிற்சி வழங்கி அரச சாரதி
அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.

* சாரதி அனுமதிப்பத்திரங்கள் புதுப்பித்தல்

மற்றும் அனுமதிப்பத்திரம் பெறுவது தொடர்பான
ஆலோசனைகள் வழங்குதல்

சேவியர் கடைச்சந்தி - கனகபுரம் வீதி - கிளிநொச்சி

(சி-10388)

கட்டடப்பொருட்கள், பெயின்ற் வகைகள்,
பல்பொறி உதிரிப்பாகங்களிற்கு
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

**கு.வி பல்பொறி உதிரிகள் வாணிபம்**

யாழ் சாலை, கிளிநொச்சி.


(சி-10387)

TP.021-228 5942


## கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.



# வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநா



## தேர்த் திருவிழா சிறப்பி


அசல் 22 கரட் தங்க நகைகளை
கைதேர்ந்த தொழில்நுட்ப
வல்லுனர்களால்
மனதைக் கவர்ந்த
டிசைன்களில் செய்துகொள்ள
இன்றே நாடுங்கள்....

**ஜெகம் நகை அகம்**

கரடிப் போக்கு, கிளிநொச்சி.
T.P:021-2285753
நவீன முறையில் மிசின் கட்டிங்
செய்து கொடுக்கப்படும்.
சி-10351

**துளசி புகைப்படக் கலையகம்**

மத்திய கல்லூரி முன்பாக
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

மெது சேவையில்:-
உட்புற வெளிப்புற படப்பிடிப்புகள்
டிஜிற்றல் வீடியோ படப்பிடிப்பு
டிஜிற்றல் முறையில் அல்பம் தயாரித்தல்
கறுப்பு வெள்ளை படங்களை கலர்படமாக்குதல்.
அரை மணி நேரத்திற்குள் புகைப்படங் களை வழங்குதல்.
சி-10352

**திருவரசி நகைத்தொழிலகம்**

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்.
நவீன முறையான மெசின்கட்
வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

**திருவரசி நகைத் தொழிலகம்**

கனகபுரம் தெரு, கிளிநொச்சி.
சி-10353



கீதை சொன்ன கண்ணன் வண்ணத் தேரில் வரு
கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தரும்

## அடியவர்கள் துயர்தீர்க்கும் எம் ஊரின்

வடதமிழீழத்தின் வன்னிப் பெருநிலப்பரப்பின் விவசாய மாவட்டங்களில் ஒன்றான கிளிநொச்சியின் நெடிதுயர்ந்த தென்னஞ்சோலைகளையும், பச்சைப் பசும் வயல்வெளிகளையும் தன்னகத்தே கொண்டமைந்த வட்டக்கச்சிப் பிதேசத்தின் மாயவனூர் மம்மில் தீர்த்தக்கரையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீரங்கநாதப் பெருமானின் தேர் உற்சவம் இன்றாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் இவை மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற இவ்வாலயம் வன்னிப்பெருநிலப்பரப்பின் புகழ்மிக்க விஷ்ணு ஆலயங்களில் ஒன்றாகும். வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமானின் வருடாந்த பிரமோற்சவம் ஆவணி மாதத்தில் வருகின்ற கிருஷ்ணஜெயந்தியைத் தேர்த்திருவிழாவாகக் கொண்ட 12தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும். திருப்பாவை, வைகுந்த ஏகாதசி, ஏகாதசி, திருவிளக்குப் பூசை, வரலஷ்சுமி பூசை, ஸ்ரீராமர் பட்டாபிசேகம், ஸ்ரீராம நவமி, ஸ்ரீஆஞ்சநேயர் ஜெயந்தி, ஆழ்வார் குரு பூசைகள் என்பன சிறப்பாக நடைபெற்று வருவதுடன் மார்கழி மாத அமாவாசையின் பின்னர் வரும் வைகுண்ட ஏகாதசியில் தென்திசை நோக்கியவண்ணம் அமர்ந்திருந்து வைகுண்டத்திலே பெருமான் பக்தர்களிற்குக் காட்சிகொடுப்பார். வைகுண்ட ஏகாதசியன்று நள்ளிரவு 12.00 மணிக்கு வைகுண்டவாசல் திறக்கப்பட்டு விசேட பூசைகள் நடைபெறும்.

ஏழரையடி நீளமான ஒரேகல்லில் லஷ்சுமி தேவி சமேத ரங்கநாதப் பெருமானின் சயன நிலையிலான உருவம் செதுக்கப்பட்டுள்ளமை இவ்வாலயத்தில் இன்னோர் சிறப்பம்சமாகும். இவ் விக்கிரகத்தனை செதுக் கியவர் பெயரும் ரங்கநாதன்



என்பது
பல
நிர்வாக
யொன்று
இதன
சந்ததியி
வ
பா
வருகின்
அடிய
கருணை
இவ்வா
பாகங்க
ஆலயம
வட்டக்க
எழுந்த
அருளின்

"பய





புல்லாங்குழல் இசைக்கும் பரந்தாமனின் பொங்கும்
அருள் இன்றைய தேர்த்திருவிழாநன்நாளில்
எல்லோருக்கும் கிடைத்திடப்பிரார்த்திக்கின்றோம்.





**தாசன் போட்டோ அன் வீடியோ**

பிரதான வீதி, இராமநாதபுரம், கிளிநொச்சி.
(சி-10354)

# ாதப் பெருமாள் கோவில்



## ப்பிதழ் - 06-09-2004

வருகிறான்!

ரும்

## ரின் முதல்வன்




ன்பது குறிப்பிடத்தக்கது.

பல ஆண்டுகளாக ஆலய ர்வாகத்தினரால் அறநெறிப் பாடசாலை யான்று நடாத்தப்பட்டு வருகின்றது. இதனூடாக அறநெறிக்கருத்துக்கள் இளைய ந்ததியினருக்கு ஊட்டப்பட்டு வருகின்றது. இதனுடன் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்காக ாலை உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டும் ருகின்றன.

அடியவர்களின் பேருதவியாலும், பெருமானின் ருணையாலும் சிறியதொரு ஆலயமாக உருவான வ்வாலயம் இன்று இலங்கையின் அனைத்துப் ாகங்களிலும் இருந்து பக்தர்கள் நாடிவரும் சிறப்புமிக்க ஆலயமாக மாறியுள்ளது. அடியவர்களின் துயர்நீக்க ட்டக்கச்சி மாயவனூரில் கோயில்கொண்டு ழுந்தருளியுள்ள ஸ்ரீரங்க நாதப் பெருமானின் அருளினைப் பெற்று உய்வோமாக.

"பயனைக்கருதி கருமம் செய்பவனாக இராதே" -
- கீதையில் கண்ணன்.



சிறப்பிதழாக்கம்:-திருவையூர் சி.ஜெயதீபன்.

புத்தம் புதிய டிசைன்களிலான
நவீன பாணியிலமைந்த
ஆடைத் தெரிவுகளுக்கு
நாடுங்கள்

மல்லாவி நகரிலும் கிளிநொச்சி நகரிலும்
புடைவை வகைகள் விற்பனையில் முன்னோடிகள்

முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை

யோகபுரம், மல்லாவி. (சி-10358) யாழ்சாலை, கிளிநொச்சி.

அசல் 22 கரட் தங்க நகைகளை,
கைதேர்ந்த தொழில்
வல்லுனர்களால் மனதைக்
கவர்ந்த டிசைன்களில்
செய்து பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்,

மீனாட்சி நகைமாட்டம்

யாழ்சாலை, (சி-10357) கிளிநொச்சி.

இளநங்கை அழகுசாதன வாணிபம்

(வரதா அழகுசாதன வாணிபம்)

உங்களுக்குத் தேவையான அழகுசாதனப் பொருட்களையும், அன்பளிப்பு பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

இளநங்கை அழகுசாதன வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-10356)

இன்று தேரேறி வரும் கண்ணபிரான் நல்லருள்எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தினரின்
மாபெரும் பரிசுத்திட்டம் அறிமுகம்



வாடிக்கையாளர் அட்டை மூலம்
பல பரிசுகளை வெல்லும் அரியவாய்ப்பு!

வணிக நிறுவனங்கள் எதிலும் இல்லாத
இவ் அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள்!

இவ் அட்டை பெறப்பட்ட நாளிலிருந்து
ஒரு வருடகாலத்திற்கு செல்லுபடியாகும்.



★இவ் அட்டை மூலம் 10000/= பெறுமதியான பொருள் கொள்வனவு செய்தவுடன் அப்பெறுமதியின் 5% கழிவை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

★குலுக்கல் பரிசாக 10000/= ரூபாய் கொள்வனவு (பகுதிபகுதியாகவோ, ஒரே தடவையிலோ)நிறைவு செய்யப்பட்ட அட்டையின் இலக்கங்கள் நான்கு மாதத்திற்கு ஒரு தடவை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு முதலாவது பரிசாக ஒரு பவுண் தங்க நாணயம் வழங்கப்படும்.

எமது காட்சியகம் முற்றிலும் குளிரூட்டப்பட்டது.

★இவ்வட்டை ஒரு வருடம் பூர்த்தியாகும் வரைக்கும் குலுக்கல் எண்ணுடன் சேர்க்கப்படும்.
★பரிசில் வழங்கப்பட்ட எண் அட்டை மீண்டும் குலுக்கல் எண்களுள் சேர்க்கப்படமாட்டாது.
★இவ் வாடிக்கையாளர் அட்டை 30.09.2004 வரைக்கும் வழங்கப்படும்.
★இவ் அட்டை மொத்தவியாபாரத்திற்கு வழங்கப்படமாட்டாது.
★ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி. T.P. 021-2285971 (சி-10355)



# வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்

# தேர்த் திருவிழா சிறப்பிதழ் - 06-09-2004


## கயல்விழி நகையகம்

அழகிற்கு அழகு செய்யும் தங்க நகைகளிற்கு
நீங்கள் தவறாமல் நாடும் இடம்
22 கரட் ஓடர் நகைகள் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.

(சி-10367) அங்காடி பின்புறம் - புகையிரத வீதி, கிளிநொச்சி.

## திருமகள் பல்பொறி உதிரிகள் வாணிபம்

உதிரிப்பாக விற்பனையில் தமக்கென
தனியிடம் பதித்தவர்கள்.

யாழ். சாலை, கரடிப் போக்கு - கிளிநொச்சி.
(சி-10371)

## சிவகுரு பல்பொருள் வாணிபம்

பல்பொருள், வேளாண் உள்ளீடுகள்,
எரிபொருள் விற்பனையாளர்.

153 ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.
(சி-10368)

## லலிதா பல்வகை வாணிப நிலையம்

உங்கள் தேவைகளுக்கு
முந்துங்கள்

**BATTERIES**
WATCH
VIDEO CAMERA
CAMERA
CALCULATOR

**பற்றரிவகைகள்**
கைக்கடிகாரம்
வீடியோ புகைப்படக்கருவி
புகைப்படக்கருவி
கல்குலேட்டர்

இவற்றுடன், இலங்கையில் முதற்தரமான மஸ்கன்னைற் கூரைத் தகடுகளை (ASBESTOSSHEET) சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

சிவசுந்தரம் வீதி, பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி. (சி-10372)

## வாநிலா நகைமாடம்

உங்களது நயம், நம்பிக்கை, நாணயமுள்ள
தங்க நகைகளிற்கு சிறந்த ஸ்தாபனம்.
22 கரட் ஓடர் நகைகள் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.

(சி-10369)
அங்காடி பின்புறம், புகையிரத வீதி, கிளிநொச்சி.

## மாவடி அம்மன் பல் பொருள் வாணிபம்

அனைத்து வகையான
பலசரக்கு பொருட்கள்
விற்பனையாளர்.

அங்காடி உட்புறம் - வட்டக்கச்சி.
(சி-10373)

## அமுதக்கடல் பல்பொருள் வாணிபம்

பல் பொறி உதிரிப்பாகங்கள்,
விவசாய தொழில்
நுட்ப உபகரணங்கள்,
கட்டிட பொருட்கள்
விற்பனையாளர்கள்.

இல. 74, கனகபுரம் தெரு,
கிளிநொச்சி.
(சி-10370)

## மது அரசி நகைமாடம்



அழகிற்கு அழகு செய்யும்
22 கரட் தங்கப்பவுன்
நகைகளிற்கு நாடுங்கள்.
மது அரசி நகைமாடம்

கனகபுரம் தெரு,
கிளிநொச்சி.
(சி-10374)

# ...நாதப் பெருமாள் கோவில்

## ...பிதழ் - 06-09-2004





...ன் முதல்வன்

...பது குறிப்பிடத்தக்கது.
...ல ஆண்டுகளாக ஆலய ...ாகத்தினரால் அறநெறிப் பாடசாலை ...ன்று நடாத்தப்பட்டு வருகின்றது. ...தனூடாக அறநெறிக்கருத்துக்கள் இளைய ...தியினருக்கு ஊட்டப்பட்டு வருகின்றது. இதனுடன் ... மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்காக ...ாலை உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டும் ...கின்றன.

...அடியவர்களின் பேருதவியாலும், பெருமானின் ...ணையாலும் சிறியதொரு ஆலயமாக உருவான ...வாலயம் இன்று இலங்கையின் அனைத்துப் ...ங்களிலும் இருந்து பக்தர்கள் நாடிவரும் சிறப்புமிக்க ...யமாக மாறியுள்ளது. அடியவர்களின் துயர்நீக்க ...டக்கச்சி மாயவனூரில் கோயில்கொண்டு ...ந்தருளியுள்ள ஸ்ரீரங்க நாதப் பெருமானின் ...ளினைப் பெற்று உய்வோமாக.

...பயனைக்கருதி கருமம் செய்பவனாக இராதே" -
- கீதையில் கண்ணன்.





சிறப்பிதழாக்கம்:- திருவையூர் சி.ஜெயதீபன்.


புத்தம் புதிய டிசைன்களிலான
நவீன பாணியிலமைந்த
ஆடைத் தெரிவுகளுக்கு
நாடுங்கள்

மல்லாவி நகரிலும் கிளிநொச்சி நகரிலும்
புடைவை வகைகள் விற்பனையில் முன்னோடிகள்

**முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை**

யோகபுரம், மல்லாவி. (சி-10358) யாழ்சாலை, கிளிநொச்சி.

அசல் 22 கரட் தங்க நகைகளை,
கைதேர்ந்த தொழில்
வல்லுனர்களால் மனதைக்
கவர்ந்த டிசைன்களில்
செய்து பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்,

**மீனாட்சி நகைமாட்டம்**

யாழ்சாலை, (சி-10357) கிளிநொச்சி.

**இளநங்கை அழகுசாதன வாணிபம்**

(வரதா அழகுசாதன வாணிபம்)

உங்களுக்குத் தேவையான அழகுசாதனப் பொருட்களையும், அன்பளிப்பு பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

**இளநங்கை அழகுசாதன வாணிபம்**

யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-10356)

இன்று தேரேறி வரும் கண்ணபிரான் நல்லருள்எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

**குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தினரின்**
**மாபெரும் பரிசுத்திட்டம் அறிமுகம்**





வாடிக்கையாளர் அட்டை மூலம் பல பரிசுகளை வெல்லும் அரியவாய்ப்பு!

வணிக நிறுவனங்கள் எதிலும் இல்லாத இவ் அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள்!

இவ் அட்டை பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடகாலத்திற்கு செல்லுபடியாகும்.

★இவ் அட்டை மூலம் 10000/= பெறுமதியான பொருள் கொள்வனவு செய்தவுடன் அப்பெறுமதியின் 5% கழிவை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
★குலுக்கல் பரிசாக 10000/= ரூபாய் கொள்வனவு (பகுதிபகுதியாகவோ, ஒரே தடவையிலோ)நிறைவு செய்யப்பட்ட அட்டையின் இலக்கங்கள் நான்கு மாதத்திற்கு ஒரு தடைவை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு முதலாவது பரிசாக ஒரு பவுண் தங்க நாணயம் வழங்கப்படும்.

எமது காட்சியகம் முற்றிலும் குளிரூட்டப்பட்டது.

★இவ்வட்டை ஒரு வருடம் பூர்த்தியாகும் வரைக்கும் குலுக்கல் எண்ணுடன் சேர்க்கப்படும்.
★பரிசில் வழங்கப்பட்ட எண் அட்டை மீண்டும் குலுக்கல் எண்களுள் சேர்க்கப்படமாட்டாது.
★இவ் வாடிக்கையாளர் அட்டை 30.09.2004 வரைக்கும் வழங்கப்படும்.
★இவ் அட்டை மொத்தவியாபாரத்திற்கு வழங்கப்படமாட்டாது.
★ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

**குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்**

யாழ்சாலை, கிளிநொச்சி. T.P. 021-2285971 (சி-10355)

# வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்

## தேர்த் திருவிழா சிறப்பிதழ் - 06-09-2004


அழகிய நவீன தங்க ஆபரணங்களிற்கு சிறந்த
ஸ்தாபனம்

**பெருமருகன் நகைப் பூங்கா**

அசல் 22 கரட் நகைகளை ஓடர் செய்து உத்தர
வாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்

கனகபுரம் தெரு, கிளிநொச்சி.

(சி-10375)

**சுமங்கலி நகைப்பூங்கா**

அழகிற்கு அழகு
செய்யும் அழகிய
தங்கப்பவுண் நகைகளை
நவீன முறையில் செய்து பெற்றுக் கொள்ளவும்
22கரட் நகைகளை குறித்த தவணையில்
ஓடர் செய்து பெற தரம் நாடுவோர்
தவறாமல் நாடும் இடம்.

யாழ். சாலை, கிளிநொச்சி.

(சி-10378)

**மணி ஐயப்பா நகைமாடம்**



ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில் செய்து
பெற்றுக்கொள்ள

(தங்கப்பவுன் நகைவியாபாரம்)

தொ.பே:021-2285981

யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-10376)

**பிறைமதி உணவகம்**

சேவியர் கடைச்சந்தியில் மக்கள் மனம் நிறைந்த
சுவையான, தரமான சிற்றுண்டி வகைகளையும்
சைவ, அசைவ உணவுவகைகளையும் சுத்தமாக சுகாதார முறையில்
பெற்ற 'கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே உணவகம்

**பிறைமதி உணவகம்**

துயிலுமில்ள வீதி, சேவியர் கடைச்சந்தி
ஆனந்தநகர், கிளிநொச்சி.

(சி-10379)

**சிவா உந்துருளி சீர்களம்**

உத்தரவுபெற்ற பஜாஜ் சுத்திகரிப்பாளரும்
திருத்துனரும் புத்தம் புதிய பஜாஜ் உந்துருளிகளுக்கு
இரண்டு இலவச சுத்திகரிப்பு வழங்கப்படும்.
நீங்கள் நாடவேண்டிய இடம்
202, ஜெயந்திநகர், கிளிநொச்சி.



(சி-10377)

**சீர்மை விற்பனை நிலையம்**

வருவாய்பகுதி முன்பாக, யாழ். சாலை, கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏகமுகவரும்
சிங்கர் குளிர்சாதனப் பொட்டி, தையல் இயந்திரம்,
நீர் இறைக்கும் இயந்திரம்,
சகலவகை தொலைக்காட்சி பெட்டிகள்,
மின் பிறப்பாக்கிகள், வானொலிப் பெட்டிகள்,
மின்னியல் பொருள்
விற்பனையாளர்கள்.




(சி-10380)





## 26

★ ஏவுகணையைத் தடுக்கும் வல்லமை கொண்ட "ஏரோ" என்ற ஏவுகணை அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள முகுமுனை என்ற நடமாடும் ஏவுதளத்தில் ஏவப்பட்டது. இந்த ஆய்வில் அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.


கூட்டாகஆய்வு

## 27

★ பாகிஸ்தானின் 23 ஆவது பிரதமராக சௌகத்அஜீஸ் சனாதிபதி பர்வேஷ் முஷராப் முன்னிலையில் பதவியேற்றுள்ளார்.


புதிய பிரதமருக்கு (இடம்) வாழ்த்து

★ கியூபாவிலிருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவினுள் குடிபெயரமுயன்ற 6 பேர் டெஸ்காஸ் மாநிலத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

## 28

★ தென்ஆப்கானிஸ்தானின் பகிற்ரா மாநிலத்தில் பாடசாலைக்கருகில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 7 சிறுவர்கள் பலியாகியுள்ளதுடன் 32 சிறுவர்கள் படுகாய மடைந்துள்ளனர்.

★ ஈராக்கிய தீவிரவாதிகளால் கடத்தப் பட்ட 2 துருக்கியர்கள் தீவிரவாதிகளினால் சுட்டுக்கொலை.

## 29

★ பிரான்சில் தென்கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற வானக விபத்தில் 8 பேர் பலியாகியதுடன் 46 பேர் படுகாய மடைந்தனர்.

★ இந்தியாவில் மூன்றாவது தடவையாக "அக்கினி" ஏவுகணை வெற்றிகரமாகப் பரிசீலிக்கப்பட்டது.

★ கிரேக்கத்தின் தலைநகர் எதென்சில் ஆரம்பமாகிய 28 ஒலிம்பிக் நிறைவுநாள்.

★ அமெரிக்க சனாதிபதி டபிள்யூ. புஷ்ஷின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நியூயோர்க் நகரில் பல இலட்சம் பேர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.



எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில்...

★ ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் இடம் பெற்ற கார்க்குண்டு வெடிப்பிலும், பக்கிட்டாவில் மதப்பாடசாலையொன்றிலும் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 17 பேர் உடல்சிதறிப் பலியாகினர்.


சம்பவ இடத்தில்...

★ பாக்தாத்தில் தொடர்ந்து வரும் மோதலை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது.

## 30.

★ யப்பானில் 210 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய புயலின் காரணமாக 4பேர் உயிரிழந்தனர்.

* பிரேசில் நாட்டிலுள்ள சால்பால்லோ நகரில் இரவுநேர கேளிக்கை விடுதி ஒன்றில் மாடி இடிந்து விழுந்ததில் 6 பேர் பலி, 100 பேர் காயம்.

* அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் சுரங்க ரயில் நிலையத்தை தகர்க்க சதி செய்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் பாகிஸ்தானியர் உட்பட 2பேர் கைது.

## 31.

★ மலேசியாவின் 47 ஆவது சுதந்திர தினம் தலைநகர் கோலாலம்பூரில் கொண்டாடப் பட்டது.

★ இஸ்ரேலின் தென்பகுதியில் இருவேறு பஸ்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 12பேர் கொல்லப்பட்டனர் 44பேர் காயமடைந்தனர்.


சிகிச்சைக்காக

★ ஈராக்கியத் தீவிரவாத குழுவொன்றினால் பணயக்கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 நேபாள நாட்டவர்கள் தீவிரவாதிகளினால் கொலை.


கொடூரக் கொலை

★ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கமும், நோர்வேயின் விசேட தூதுவர் எரிசூல் கெய்மும் போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக லண்டனில் சந்தித்து பேசினர்.

★ சூடானின் டார்பூர் பிராந்தியத்திலுள்ள அகதி முகாம்களில் பணியாற்றி வந்த 8 சர்வதேச நிவாரணப் பணியாளர்கள் கிளர்ச்சியாளர்களால் கடத்தப்பட்டனர்.

★ ஈராக்கை விட்டு அமெரிக்கா வெளியேறவேண்டும் என்று கோரி பிராஞ்சு அதிபர் ஜாக்சிராக் ரஷ்ய அதிபர் விளாதிமீர் புதின், ஜேர்மன் பிரதமர் ஜெரார்ட்டுரோடர், ரஷ்யாவின் கருங்கடல் பகுதியிலுள்ள சோச்ஷீசி என்ற கடல் வாசல்த்தலத்தில் சந்தித்துப் பேசினர்.


தலைவர்கள் ஆலோசனை

## 01.

★ ஈராக்கியத் தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்டு 43 நாட்கள் வரை தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்தியப்பணயக் கைதிகள் விடுதலை.


பணயக்கைதிகள் விடுதலை

★ ரஷ்யாவின் தென்பகுதியிலுள்ள பாடசாலையில் பாடசாலைச் சிறுவர்கள் 200பேர் உட்பட 400பேர் செச்சினிய ஆயுததாரிகளினால் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.


உறவினர் சோகத்தில்

★ ஈராக்கில் 100 உறுப்பினர்களைக் கொண்ட தேசியசபை என்னும் அமைப்பு தமது பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

# கொலைக்குற்றங்களை விசாரிக்கும் நீதிபதிகளுக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் கொலைக் குற்றங்களை விசாரிக்கும் நீதிபதிகளுக்கு பாதுகாப்பு வழங்க விசேட பாதுகாப்புப் பிரிவொன்றை அமைக்க சிறிலங்கா அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

அவர்களுக்கு பாதுகாப்பு மிகவும் குறைவாக இருப்பதால் விசேட பாதுகாப்பு வழங்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் ஜோன்செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸ் திணைக்களத்துடன் தொடர்புகொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக நீதிமன்றத்திற்குள்ளும் வளாகத்திற்குள்ளும் புகுந்து துப்பாக்கிச் சூடு நடத்தும் சம்பவங்கள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பல்வேறு நாடுகளுக்கு புதிய தூதுவர்கள் நியமனம்

(கொழும்பு)

பல்வேறு நாடுகளுக்குமான தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் சிபார்சின் பேரில் சனாதிபதி சந்திரிகாவின் அனுமதியுடன் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் படி எம்.ஜே. பலிப்பன ஜேர்மன் சமஷ்டிக் குடியரசிற்கான தூதராகவும், என். சிக்கந்தர் சுவீடனுக்கான தூதராகவும், ஏ.பி குணதிலக கனடாவிற்கான உயர்ஸ்தானிகராகவும், ரஞ்சித் உயன்கொட ஜப்பானுக்கான தூதராகவும், திருமதி. பமிலா ஜே.டீன் நெதர்லாந்திற்கான தூதராகவும், பிரசாத் காரியவாசம் ஐக்கிய நாடுகளுக்கான நிரந்தரப் பிரதிநிதியாகவும், ஏ.எம்.ஜே. சதீக் சவுதி அரேபியாவிற்கான தூதராகவும், திருமதி ஆருணி விஜேவர்த்தன ஒஸ்திரியாவிற்கான தூதராகவும், திருமதி சீ.வாகிஸ்வரா பிரான்சிற்கான தூதராகவும் டபிள்யூ.எம் செனவிரத்ன பிலிப்பைன்ஸிற்கான தூதராகவும், எம். மஹ்ரூப் ஓமானுக்கான தூதராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் என். நவரத்தினராஜா போலந்திற்கான தூதராகவும், நெவில்ரணசூரிய ரஷ்யக் கூட்டமைப்பிற்கான தூதராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஐ.தே.க.வின் வருடாந்த விழா

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியின் 58 ஆவது வருட விழா கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று திங்கட் கிழமை புறக்கோட்டை சிறிகொத்தா தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் எதிர்காலத்தில் எடுக்கப் போகும் திட்டங்கள் அறிவிக்கப் படும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## சந்திப்பு

(கொழும்பு)

இந்தியாவிற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட கடந்த வெள்ளியன்று இந்தியவெளியுறவு அமைச்சர் நட்வர்சிங்கையும், பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என். டிக்சித்தையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச் சந்திப்பின்போது இரு நர்டுகளின் விடயங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்திற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்தமொறகொட இந்தியா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பௌத்தபிக்குவைக் கொல்ல தப்பியோடிய சிப்பாய் முயற்சி

### -இரண்டு கைக்குண்டுகளுடன் கைது

களுத்துறை மாவட்டம் அவுன் கல்லப் பகுதியில் பிக்கு ஒருவரைக் கொலைசெய்வதற்கெனச் சென்று தப்பியோடிய இராணுவச்சிப்பாய் ஒருவரைப் பலப்பிட்டிய பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர் பௌத்த பிக்குவைக் கொல்வதற்கென இரண்டு கைக்குண்டுகளை வைத்திருந்தார் எனவும், சொந்தப்பகை காரணமாகவே இவ்வாறு அவர் கொலை செய்யத்திட்டமிட்டிருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சிறுமி மீது பாலியல் வல்லுறவு பொலிஸ் அதிகாரிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

சிறுமியை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்திய சிறிலங்காவின் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு- கறுவாத் தோட்ட பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இப்பொலிஸ் சார்ஜன்ட் குறித்த குற்றச்சாட்டிற்காக நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது இவரை இம்மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதியாளர் செல்வி. சரோஜினி குசல வீரவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

# யால தேசியப் பூங்கா வரட்சியால் மூடப்பட்டது

(கொழும்பு)

சிறிலங்காவின் யாலதேசியப் பூங்கா ஒரு மாதகாலத்திற்கு மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய வரட்சி நிலையினால் பூங்காவிலுள்ள மிருகங்கள் நெருக்கடிக்குள் இருப்பதாகவும் இவற்றைப் பாதுகாக்கும் முகமாகவே செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் இப் பூங்கா மூடப்பட்டுள்ளதாகவும் வனவள திணைக்களத் தலைவர் கூறியுள்ளார்.

# இ.தொ.கா.இணைவதில் பிரச்சினையில்லை

**விமல்வீரவன்ச**

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்துகொள்வதில் தங்களுக்கு எவ்வித தயக்கமோ, எதிர்ப்புகளோ கிடையாதென்று ஜே.வி.பி. கூறியுள்ளது.

பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வியில் ஜே.வி.பி.யின் பேச்சாளரான விமல்வீரவன்ச கூறியதாவது தாங்கள் தொழிலாளர் காங்கிரஸ் இணைவதை வரவேற்பதாகவும், விடுதலைப்புலிகள் முன்வைத்திருக்கின்ற இடைக்கால தன்னாட்சி அமைப்பின் அடிப்படையிலே பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டுமென் கின்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நிலைப்பாடு கூட தங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஏனெனில் ஜே.வி.பி. ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கு எப்போதும ஆதரவானது என்றும் கூறினார்.

# தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| 01) உப பரிசோதகர் :- | க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை 18-30 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 02) காவல்துறை உறுப்பினர் :- | க.பொ.த.(சாதாரணம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும் வயதெல்லை 18-30வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 03) எழுதுவினைஞர் :- | க.பொ.த.(சாதாரணம்)சித்தியுடன் 05 பாடங்களில் தமிழ்மொழி உட்பட திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த.(உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 04) தட்டெழுத்து/ சுருக்கெழுத்து :- | க.பொ.த(சாதாரணம்) சித்தியுடன் தட்டெழுத்து/ சுருக்கெழுத்தில் தகைமையுடன் நிமிடத்திற்கு 15 சொல்லுக்கு குறையாமல் தட்டெழுத்து செய்தல் வேண்டும். |
| 05) அலுவலக உதவியாளர் :- | க.பொ.த. (சாதாரணம்) தமிழ் மொழி உட்பட 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை18-30 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 06)கணனிஇயக்குநர் :- | க.பொ.த.(சாதாரணம்) சித்தியுடன், கணனிக்கற்கை நெறிப்பிரிவுகளில் அதிகூடிய பிரிவுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 07) வரவேற்பாளர் :- | க.பொ.த.(சாதாரண தரம்) சித்தியுடன்,நல்ல பேச்சு வன்மை இருத்தல் வேண்டும். வயதெல்லை 18-25 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 08) மொழி பெயர்ப்பாளர் :- | ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்தலில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 09) சாரதி :- | இலகு/கனரகவாகனம் செலுத்துவதற்குரிய அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். சாரதியத்தில் நல்ல அனுபவம் இருத்தல்வேண்டும். வயதெல்லை 20-30வரை |
| 10) மெக்கானிக் :- | மோட்டார் சைக்கில்/டீசல் இயந்திரங்கள் திருத்துதலில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும். |
| 11) களஞ்சியக் காப்பாளர் :- | க.பொ.த.(சாதாரணதரம்) சித்தியடைத்திருத்தல் வேண்டும். |
| 12) நிர்வாக அலுவலகர் :- | க.பொ.த.(உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும் 05 வருட அனுபவமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். |

மேற்படி பதவிகளில் இணைய விரும்பும் விண்ணப்பதாரர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்திற்கு எதிர்வரும் 2004.09.08 முதல், 2004.09.30 வரை காலை 08.00 மணி தொடக்கம் மாலை 05.00 மணிவரை நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**பொறுப்பாளர்,**
**ஆளணிப்பிரிவு,**
**காவல்துறை,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி- 10347)



வவுனிக்குளம் வேளாங்கன்னி மாதா ஆலயப் பெருவிழா

நற்கருணைத் தினம் :- 7ஆம் திகதி மாலை 5மணி
பெருவிழாத் திருப்பலி :- 8ஆம் திகதி காலை 7மணி
ஆரோக்கிய அன்னையின்அருள் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத் தந்தையும், ஆலய அருட்பணிச் சபையினரும்.

(5030)

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 1944 * 08 * 16



உதிர்வு 2002 * 08 * 31

அமரர்

## இராசமலர் அருளம்பலம்

திதி 2004.09.06

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி:
இல.52, D-10, உருத்திரபுரம்.

(4910)

தகவல்
குடும்பத்தினர்.

# ஈராண்டு நினைவலைகள்

மண்ணில் 15 - 10 - 1942



விண்ணில் 06 - 09 - 2002

## திருமதி நீற்றா நானானந்தராஜா

அன்பின் அமைவிடமே
ஆருயிர் எம் உறவே!
கண்மணியாய் எமைவளர்த்த
கருணைத் தெய்வமே – உனை
எண்ணி எண்ணித் தவிக்கின்றோம்.
மறையவில்லை உம் நினைவு

ஈராண்டு கழிந்த பின்னும்
நம் மனது தவிக்கிறது
உம் சொந்தம் உமக்காக
உரிமையுடன் பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்

தகவல்
ராஜன்
மல்லாவி

(சி.10334)

தங்கள் கணவன், மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,உற்றார், உறவினர், நண்பர்கள்.

# 3ஆம் ஆண்டு நினைவலைகளில்

தாயின் மடியில் 1986



தாயக மண்ணில் 06 ★ 9 ★ 2001

## தேசியத்துணைப்படை வீரர் சுதாகரன்

### தனராஜ் சுதாகரன்

நி.மு. :- வவுனியா மாவட்டம்
த.மு. :- ஊற்றுப்புலம் கிளிநொச்சி

06.09.2001 அன்று விளக்கு வைத்தகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் பதுங்கித் தாக்குதலின்போது வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்" (5033)

# தமிழக ஆளுநர் ராமமோகன்ராவ் ராஜினாமாக் கடிதத்தை அனுப்பமுடிவு

(சென்னை)

தமிழக கவர்னர் ராமமோகன் ராவ் சனாதிபதிக்குத் தனது ராஜினாமாக் கடிதத்தை அனுப்பத் தயார் நிலையில் இருப்பதால் அ.தி.மு.க. எம்.பிக்கள் வழக்கைக் காரணம் காட்டி அவரது ராஜினாமாவைத் தடுக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா முயற்சி எடுத்து வருகிறார்.

தமிழக கவர்ணர் ராமமோகன் ராவ் மாற்றப்படுவார் என்ற தகவல் பரவியதைத் தொடர்ந்து அவரை மாற்றாமற் காப்பாற்ற தமிழக முதன்மந்திரி தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறார். கவர்னரைக் காப்பாற்றும் முயற்சியாக அ.தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர்கள் 12பேர் மூலம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர் மனுச் செய்துள்ளார். ஆளுனரின் பொருட்களில் பல ஏற்கனவே அவரது சொந்த ஊரான கைதரபாத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகின்றது

## மண் சரிவு ஐவர் பலி

(புதுடில்லி)

சிக்கிம் மாநிலத்தில் அடுத்தடுத்து நிலச்சரிவுகள் ஏற்பட்டதில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

தெற்கு சிக்கிமில் அடைமழைபெய்து வருவதால் பெருமளவில் மண்சரிவு கள் ஏற்பட்டு இரண்டுபாலங்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

# காவிரிநீர்ப் பிரச்சினை பற்றி ஆராய அனைத்துக் கட்சிக் கூட்டம் - முதல்வர் ஜெயலலிதா முடிவு

காவிரிநீர்ப் பிரச்சினை பற்றி ஆராய அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டத் தமிழக முதல்வர் ஜெயலலிதா முடிவு செய்துள்ளார்.

காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தி.மு.க. தலைவர் கருணாநிதியின் தீவிர முயற்சியின் பேரில் 1990ஆம் ஆண்டு வி.பி.சிங் பிரதமராக இருந்த போது நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. நடுவர் மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பை அமுல்படுத்த மறுக்கும் கர்நாடக அரசு இப்போது நடுவர் மன்றத்தை மீண்டும் புதிதாக ஏற்படுத்தவேண்டும் என்று கோரிக்கையெழுப்பியுள்ளது. இதற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கடுமையான கண்டனம் தெரிவித்தார்.

காங்கிரஸ், பா.ம.க., ம.தி.மு.க, கம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட தமிழக அரசியல் கட்சிகள் விவசாய அமைப்புக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இந்தப் பிரச்சினையில் தீவிரம் காட்டுமாறு முதல்மந்திரி ஜெயலலிதாவுக்குக் கண்டனமும் அதிகரித்து வருகிறது. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பைத் தொடர்ந்து இன்னும் சில நாட்களில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தி முடிவெடுப்பது என்று ஜெயலலிதா முடிவுசெய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

# தடுப்புக்காவல் கைதிகளின் மரணம் குறித்து அறிக்கை கோரல்

(புதுடில்லி)

பொலிஸ் காவலில் இருக்கும் போது நிகழ்ந்த மரணங்கள் குறித்த அறிக்கையினை தாக்கல் செய்யுமாறு மகாராஸ்ராமாநில அரசை பம்பாய் உயர்நீதிமன்றம் பணித்துள்ளது.

2002,2003இல் 18பேரும், 2001, 2002 இல் 27பேரும் பொலிஸ் காவலில் இருக்கும் போது மரணமடைந்துள்ளதாக தேசிய மனித உரிமைகள் அமைப்புக்கூறியுள்ளது.

காவலில் இருக்கும் கைதிகள் மரணிப்பதில் உத்தரப்பிரதேசம் முதலிடமும் மகராஸ்ரா இரண்டாமிடமும் வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# சிபுசோரன் பிணையில் விடுதலையானார்

முன்னாள் மத்திய அமைச்சர் சிபுசோரன் கடந்த வெள்ளிக்கிழமை பிணையில் விடுதலையானார். ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் சிபுசோரன் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசியல் நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை மந்திரியாகப் பதவி வகித்து வந்தார்.

அவருக்கு ஜார்க்கண்ட் மாநிலச் சிருதியில் 11 பேர் படுகொலைப் செய்யப்பட்டது தொடர்பாக ஜம்தாரா நீதிமன்று கைதுபிடியாணை பிறப்பித்தது. இதையடுத்தே சிபுசோரன் தனது மந்திரிப் பதவியை இராஜினாமா செய்தார். கடந்த மாதம் 2ஆம் திகதி நீதிமன்றில் சரண் அடைந்ததைத் தொடர்ந்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

சிபுசோரன் தன்னைப் பிணையில் விடுவிக்கக் கோரி அன்றைய தினமே ஜம்தாரா மாவட்ட செசன்சு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய் தார். அந்தப்பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இதேவேளை சிபுசோரனுக்கு கடந்த வெள்ளிக் கிழமை பிணை கிடைத்தது. ஜாகோர்ட் நீதிபதி தபன் சென் நிபந்தனையின் பேரில் பிணை வழங்கினார்.

சிபுசோரன் தனது கடவுச் சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டும். நீதிமன்ற அனுமதியில்லாமல் வெளிநாட்டுக்குச் செல்லக்கூடாது. அப்படி வெளிநாடு போக வேண்டுமானால் நீதிமன்ற அனுமதி பெறவேண்டும். ஒவ்வொரு நாளும் நேரில் ஆஜராக வேண்டும். தலா 1இலட்சம் மதிப்பில் இரண்டு பிணை வழங்கப் படவேண்டும்.

சாட்சியங்களைக் கலைக்க முயன்றதாக நீதிமன்று அறிந்தால் பிணை உடனடியாக இரத்துச் செய்யப்படும். இவ்வாறு நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டு இருந்தார்.


# இடமாற்றம்

புதுக்குடியிருப்புச் சந்தியில் இயங்கிவந்த

"திருக்குமரன் புடவை மாளிகை" (ரெலிக்கோணர்)

இன்றுமுதல் (06.09.2004) புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு சாலையில் அமைந்துள்ள திருக்குமரன் அழகுமாடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதனை அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வழமையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

உங்களுக்குத் தேவையான :-

- *புடைவை வகைகள்
- *இலத்திரனியல் பொருட்கள்
- *அன்பளிப்புப் பொருட்கள்
- *ஆடம்பரப்பொருட்கள்
- *அழகுசாதனப்பொருட்கள்
- *விளையாட்டுப்பொருட்கள்
- *பாதணி வகைகள்
- *மணிக்கூட்டு வகைகள்.



அனைத்தும் ஒரே இடத்தில் மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

திருக்குமரன் புடவைமாளிகை,
முல்லைத்தீவு சாலை,
புதுக்குடியிருப்பு.

(சி-9189)



# குளங்களின் பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்ட காணிகள் விற்பனை

## வவுனிக்குளம்

வவுனிக்குளத்தின் குளக்கட்டிற்கு அருகாமையில் உள்ள குளங்களின் பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்ட காணிகள் அண்மையில் இடம்பெற்ற இடப்பெயர்வுகளின்போது குடியிருந்தவர்கள் வெளியேறிச்செல்லும் போது அக்காணிகளை இங்குள்ளவர்களுக்கு விலைக்கு விற்றுச் செல்வதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இக்காணிகளுக்கு எக்காரணம் கொண்டும் காணி அனுமதிப் பத்திரம் வழங்க நீர்ப்பாசனத் திணைக்களம் சிபார்சு செய்யமாட்டாதது மட்டுமல்ல, இவர்களை அங்கிருந்து வெளியேற்றப் படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர்கட்கு சிபார்சு செய்யும்.

எனவே, இவ்வாறான காணிகளை விலைக்கு வாங்க வேண்டாமென அறிவுறுத்து கின்றோம்.

எந்திரி . வ. தவக்குமார்
நீர்ப்பாசனப் பொறியியலாளர்
வவுனிக்குளம்.

(சி-10212)



# பணிநிலை வெற்றிடம்

முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் புதுக்குடியிருப்பு

1.பதவி: களஞ்சியப் பொறுப்பாளர்.

சம்பளக் குறியீட்டு இலக்கம : 202/13
சம்பள அளவுத் திட்டம : (4000-75x10-80x10-5550/-)

2. தகைமைகள்:

கூட்டுறவுப் பணியாளர் சேவையில் 12 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 02 வருட கால அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் சேவையில் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 04 வருட அனுபவம்.

அல்லது

கூட்டுறவு தராதரப் பத்திரம் (சாதாரணம்) அல்லது க.பொ.த.சா.தரப பரீட்சையில் கணிதம்/ வர்த்தகஎண்கணிதம/ எண்கணிதம் மற்றும் தமிழ் மொழி உடபட 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களிலான சித்தி அதுடன் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியொன்றில் 02 வருட அனுபவம்.

வயதெல்லை: 21-45

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை குறிக்கப்படமாட்டாது.

குறிப்பு: ஆண் பாலார் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 2004.09.15ஆம் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் தலைவர், முல்லை மாவட்ட, ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் இணையம், மந்துவில் புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இ.கெங்காதரன்.
தலைவர்,
முல்லை மாவட்ட ப.தெ.வ.
இணையம், புதுக்குடியிருப்பு.

(சி.9190)

# நட்வெஸ்ட் ஒரு நாள்போட்டி தொடர் இந்திய அணிக்கு ஆறுதல் வெற்றி




இங்கிலாந்து -இந்திய அணிகளுக்கிடையில் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற நட்வெட்ஸ் கிண்ண ஒரு நாள் போட்டித் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் இந்திய அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி 49.3 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களை பெற்றது.

நேற்றைய போட்டியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கங்குலியுடன் லக்ஸ்மன் களமிறங்கியிருந்தார். துடுப்பாட்டத்தில் கங்குலி சிறப்பாகத் துடுப்பபெடுத்தாடி 90 ஓட்டங்களையும், ராவிட் 52 ஓட்டங்களையும் பெற்றனர் மற்றைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் ஹார்மிஷன் 22 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் டரன்கௌவ், வார்வ் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இந்திய



அணி சார்பில் இந்த போட்டியில் 19 வயதுடைய தமிழக வீரர் தினேஷ் கார்ததிக் அறிமுகமானார்.

பதிலுக்கு 205 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலை



யில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி இந்தியாவின் ஆரம்பப் பந்து வீச்சாளர்களைச் சமாளிக்க முடியாது அதன் முன்னணி நான்கு விக்கெட்டுக்களை இழந்தது.

இந் நிலையில் ஒருவாறாக அணித்தலைவர் வோகனும் சுழற்பந்து வீச்சாளர் ஹைல்ஸ் ஆகியோர் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய போதும் இருவரையும் ஹார்பஜன்சிங் வெளியேற்ற இங்கிலாந்து அணியின் தோல்வி உறுதியானது.

பின்னர் வந்தவர்களும் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க 48.2 ஓவரில் இங்கிலாந்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

வோகன் 74 ஓட்டங்களையும், ஹைல்ஸ் 39 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர் .

பந்து வீச்சில் ஹார்பஜன் சிங், நெஹ்ரா தலா 3 விக்கெட்டுக்களையும்,பதான் 2விக்கெட் டையும் கைப்பற்றினர் ஏற்கனவே மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 2-0



என்ற நிலையில் இங்கிலாந்திடம் இழந்த இந்திய அணிக்கு மேற்படி வெற்றி ஆறுதல் வெற்றியாக அமைந்தது.

## அத்தப்பத்து நம்பிக்கை

ஐ.சி.சி மினி உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்வதற்காகச் சிறிலங்கா கிரிக்கெட் அணி நேற்று இங்கிலாந்து புறப்பட்டுச் சென்றது.

இம் முறை மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றி சம்பியனாக மாறுவோம் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் அணித்தலைவர் அத்தப்பத்து.

இந்நிலையில் சிறிலங்கா அணி எதிர்வரும் 14 ஆம் திகதி தனது முதலாவது போட்டியில் சிம்பாப்வேயை எதிர்கொள்கின்றது.

## பெருமை பெற்றார்



இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளர் டரன் கௌவ் ஒரு நாள சுவதேச போட டியில் இங்கிலாந்து அணி சார்பாக 200 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதலாவது பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

அவர் 133 போட்டிகளில் மேற்படி விக்கெட்டுக்களை வீழ்த்தி யுள்ளமை குறிப்பிடத தக்கது.நேற்று நடைபெற்ற இந்திய அணிக்கு எதிரான நட்வெட்ஸ் கிண்ண ஒரு நாள் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டியில கும்ளேயை வீழ்த்தியதன் மூலம் மேற்படி பெருமைக்குரியவரானர்.

## பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு பரபரப்பு வெற்றி



பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கும் அவுஸ்திரேலிய கிரிக்கெட்அணிக்கும் இடையில் நேற்று முன்தினம் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 10 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் அணி வெற்றி பெறக் கூடிய சூழ்நிலை இருந்த போதும் கடைசிநேரத்தில் அவர்கள பொறுமை இழந்ததன் காரணமாக அவுஸ்திரேலிய அணியின் பொறுமையான நிதானமான ஆட்டத்தினால் இப்போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 259 ஓட்டங்களைப் பெற்றது. இதில் 104 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார் அன்ரூ சைமன் அவரது இரண்டாவது ஒருநாள் சதம் இது.

கடந்த உலகக்கிண்ண போட்டியிலும் சைமன் பாகிஸ்தானுக்கு எதிராக சதம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் ஹெய்டனும் 52 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 249 ஓட்டங்களை மட்டும் பெற்றுத் தோல்வித் அடைந்தது.

இதில் யூசுப் யுஹானா88 ஓட்டங்களையும் அணித்தலைவர் இன்சமாம் உல்-ஹக் 72 ஓட்டங்களையும் பெற்றார்.ஆனால் வெற்றிக்கு அணியை அழைத்துச் செல்லமுடியவில்லை.

## ஐ.சி.சி மினி உலகக் கிண்ண போட்டி அட்டவணை

குழு A - அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா
குழு B - தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவு, பங்களாதேஷ்
குழு C -பாகிஸ்தான், இந்தியா, கென்யா
குழு D - சிறிலங்கா, இங்கிலாந்து, சிம்பாப்வே

| திகதி | போட்டி அணிகள் | இடம் |
|---|---|---|
| 10 | இங்கிலாந்து எதிர் சிம்பாப்வே | எடிக்பாஸ்ரன் |
| 10 | நியூசிலாந்து எதிர் அமெரிக்கா | ஓவல் |
| 11 | இந்தியா எதிர் கென்யா | றொஸ்பவல் |
| 12 | தென்னாபிரிக்கா எதிர் பங்களாதேஷ் | எடிக்பாஸ்ரன் |
| 13 | அவுஸ்திரேலியா எதிர் அமெரிக்கா | றொஸ்பவல் |
| 14 | பாகிஸ்தான் எதிர் கென்யா | எடிக்பாஸ்ரன் |
| 14 | சிறிலங்கா எதிர் சிம்பாப்வே | ஓவல் |
| 15 | மேற்கிந்தியத் தீவு எதிர் பங்களாதேஷ் | றொஸ்பவல் |
| 16 | அவுஸ்திரேலியா எதிர் சிம்பாப்வே | ஓவல் |
| 17 | சிறிலங்கா எதிர் இங்கிலாந்து | றொஸ்பவல் |
| 18 | தென்னாபிரிக்கா எதிர் மேற்கிந்தியதீவு | ஓவல் |
| 19 | இந்தியா எதிர் பாகிஸ்தான் | எடிக்பாஸ்ரன் |
| 21 | முதலாவது அரையிறுதி வெற்றி குழு A எதிர் வெற்றிக் குழு D அணிகள் | |
| 22 | இரண்டாவது அரையிறுதி வெற்றி குழு B எதிர் வெற்றிக் குழு C அணிகள் | |
| 25 | இறுதிப் போட்டி ஓவலில் நடைபெறும் | |



## விளையாட்டு



உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் நடாத்திய கால்பந்துச் சுற்றுப போட்டியில் 2ஆம் இடதலைப் பெற்ற புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா அணித்தலைவர் சம்பியன் கிண்ணத்தைப் பெறுகிறார்

## சந்திரோதய அணி சம்பியன்



உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் தனது 49 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்திய கால்பந்துச் சுற்றுப் போட்டியின் சம்பியன் அணியாக உருத்திரபுரம் சந்திரோதயா அணி தெரிவானது.

நேற்று உருத்திரபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்து சந்திரோதயா சமபியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. முன்னதாக நடைபெற்ற அரையிறுதி ஆட்டங்களில் சந்திரோதயா அணி சோலை அணியை 1-0 என்ற நிலையிலும் விக்கினேஸ்வரா உருத்திரபுரம் ம.வியை 3-2 என்ற நிலையிலும் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

இப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக சந்திரோதயா கோல் காப்பாளர் டிரோன் திலீப் தெரிவானார்.

## உலக கால்பந்து தெரிவுப் போட்டிகளில் முன்னணி நாடுகளின் அணிகளுக்கு அதிர்ச்சி



உலகக் கிண்ண கால்பந்து தெரிவுப் போட்டிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

ஆர்ஜன்டினா ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கத்தை வென்றதன் பின் கலந்து கொண்ட முதலாவது போட்டியில் பெரு அணியை 3-1 என இலகுவாக தோற்கடித்துள்ளது.

இதன் மூலம் தென்னமெரிக்கா வலயப் போட்டிகளில் ஆர்ஜன்டினா 8 போட்டிகளில் 15 புள்ளிகளைப் பெற்று முதலிடத்துக்கு முன்னேறி யுள்ளது.


பிரேசில் 7 போட்டிகளில் கலந்து கொண்டு 13 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

சீலி தொடர்ந்து மூன்றாவது இடத்தில் 11 புள்ளிகள், பரகுவே 10, வெனிசுவெலா10 எனத் தொடர்கிறது இதேவேளை மத்திய அமெரிக்க கால்பந்து போட்டிகளில் அமெரிக்கா 3-0 என்று எல்சல்வடோரைத் தோற்கடித்தது

பனாமா அதிர்ச்சிகரமான தோல்வியை ஜமேக்காவுக்கு வழங்கியது. 2-1 என்று தோற்கடித்தது,


இதனை விட நேற்று முன் தினம் ஐரோப்பிய வலய கால்பந்து போட்டியில் அதிர்ச்சிகரமான தோல்வி ஒன்று கிடைத்தது. புதிய ஐரோப்பிய சம்பியன் கிரீஸ், அல்பேனியா அணியிடம் 2-1 என்ற நிலையில் தோற்றுப் போனது.

மற்றுமொரு ஆச்சிரியமான முடிவு இங்கிலாந்து அணி அஸ்திரேலியாவுக்கு எதிரான 2-2



என்று சமப்படுத்த வேண்டிய நிலை. அத்துடன் பிரான்ஸ் அணி இஸ்ரேல் அணியிடம் கோல் எதனையும் பெற முடியாது வெற்றி தோல்வியற்ற முடிவுக்கும் தள்ளப்பட்டது.

சுவீடன் அணி 7-0 என்று வெற்றி பெற்றது.மோல்ட் அணிக்கு எதிராக அந்த வெற்றி பெறப் பட்டது.



## சிந்தனைக்கு

ஒரு விடுதலை இயக்கத்துக்குப் பின்னால் மக்கள் அணிதிரண்டு, அந்த இயக்கத்தின் இலட்சியத்தில் பற்றுக் கொண்டு, போராட்டத்தில் பங்கு கொள்ளும் பொழுது, தான்விடுதலை சாத்தியமாகிறது.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 06-09-2004

மின் அஞ்சல்
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com

## சமாதான வழியில் முன்னேற....!

பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் யுத்தம் நிகழ்வதற்கான வாய்ப்பே இல்லை என்பது போன்ற அறிவிப்புக்கள் சிறிலங்கா அரச தரப்பிலிருந்து வெளிவந்தவண்ணமுள்ளது. அதிலும் குறிப்பாக, சனாதிபதி சந்திரிகா லண்டனில் இருந்து திரும்பியதும் இத்தகைய அறிவிப்புக்கள் வெளிவருவது சற்று அதிகமாகவே உள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதும், யுத்தம் ஒன்று மீண்டும் மூளாமல் தடுக்கப்படுவதும் விரும்பத்தக்கதும், வரவேற்கத்தக்கதுமே ஆகும். அதிலும், குறிப்பாக, யுத்தத்தினால் பெரும் இழப்புக்களையும், துயரங்களையும் சந்தித்த தமிழ் மக்கள் தரப்பில் இருந்து இதற்கான வரவேற்பு முழு அளவிலானதாகவும்; முழு மனத்துடனும் வழங்கப்படும் என்பதில் எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லை.

ஆனால், அரசாங்கத் தரப்பு காலத்திற்குக் காலம் சமாதானம் பற்றிப் பேசுவதும், அடுத்து யுத்தம் பற்றிப் பேசுவதும் சவால் விடுவதும் யுத்த நிறுத்தம் சமாதானப் பேச்சுவார்த்தை என்பனவற்றிற்கு மாறாகச் செயற்படுவதுதன் காரணமாகவே. அரசாங்கம் சமாதானம் குறித்துப் பேசும் போது எவரும்அதில் நம்பிக்கை வைக்க முடியாதுள்ளது. அத்தோடு, அரசாங்கம் உளப்பூர்வமாகச் சமாதான முயற்சிகளில் ஈடுபடுகின்றதா? என்ற கேள்வி எழவும் காரணமாகிறது.

விடுதலைப்புலிகளுக்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாடும் சரி, அதற்கு அப்பாலும் சரி அரசு என்ற ரீதியில் சிறிலங்கா அரசின் செயற்பாடுகள் குறித்து விடுதலைப்புலிகள் பெரும் கண்டனங்களை எழுப்பியதாக இல்லை. அதாவது, யுத்த நிறுத்த உடன்பாட்டின்போது அரசு தன்னை இராணுவ ரீதியில் பலப்படுத்திக் கொள்ள மேற்கொள்ளும் நடவடிக்கை எதையும் புலிகள் தீவிரமாக எதிர்த்ததில்லை.

இந்த வகையில், ஆயுதப் பெருக்கம், நவீனப்படுத்தல், விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராஜதந்திர நடவடிக்கை போன்றவை அரசாங்கம் சமாதான முயற்சிகள், அரசியல் தீர்வு என்பனவற்றின் மீதான நம்பிக்கையீனத்தின் அடிப்படையில் மேற்கொண்டாலும், இது யுத்த நிறுத்த உடன்பாட்டால் கட்டுப்படுத்தப்படாதவையாகவும், இத்தகைய நடவடிக்கைகளுக்கு அரசிற்குரிய உரிமை என்ற ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப் பட்டதாகின்றது.

ஆனால், அரசாங்கம் உளப்பூர்வமாகவும் சரி, தனது விருப்பிற்கு மாறாகவும் சரி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படுதல் வேண்டுமானால், தமிழ் மக்கள் தரப்பில் உள்ள உள் முரண்பாடுகளைதமக்கு சார்பான வகையில் கையாழுதல், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குள் ஏற்படும் சிறு சச்சரவுகளைக் கையாள முற்படுதல், யுத்தம் குறித்துச் சவால்விடும் அமைச்சர்களை ஊக்குவித்தல் என்பது போன்ற விடயங்களைக் கைவிடுதல் வேண்டும்.

ஒரு இனத்திற்குள்ளும் சரி, ஒரு சமூகத்திற்குள்ளும் சரி பிரதேச சாதி, சமய உணர்வுகள் இருப்பது வழமையே. இவை அதிகரித்த மட்டத்திலும் இருக்கலாம். குறைந்த மட்டத்திலும் இருக்கலாம். இதற்குத் தமிழ் இனமும் விதிவிலக்கானதல்ல. ஆனால், அவற்றை அரசு தமது அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் நோக்கில் அவற்றை முனைப்புப்படுத்துவதும், கிளறிவிடுவதும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான மார்க்கமாக இருக்கமாட்டாது.

இதேபோன்றே, ஓர் அமைப்பிலும் சில சமயங்களில் கருத்து வேறுபாடுகள் எழலாம். சிலர் தமது சுயநலத்தை நோக்கமாகக் கொண்டு அவ்அமைப்பினைக் காட்டிக் கொடுக்கவும், அதில் இருந்து பிரிந்து செல்லவும்கூடும். அதாவது, கருணா நடந்து கொண்டது போன்று செயற்பட முனையலாம். ஆனால், இதனை அரசாங்கம் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முற்படுவதானது அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாராகவுள்ள எதிர்த் தரப்பைப் பலவீனப்படுத்த முனைவதாகவே கொள்ள வேண்டி இருக்கும்.

அடுத்ததாக, ஒவ்வொரு இனத்திலும், சுயலாபங்களுக்காகவும் சுகபோகத்திற்காகவும் துரோகம் செய்யும் கும்பல்கள் இருப்பது தவிர்க்க முடியாததே. இந்த வகையில் தமிழ் மக்கள் உரிமைப் போராட்டத்தினைக் காட்டிக் கொடுத்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளப் பல இன விரோதக் குழுக்களும் தனிநபர்களும் இருக்கவே செய்கின்றனர். ஆனால், சமாதானத்தை விரும்பும் எந்த அரசுமே இவர்களைப் பயன்படுத்த விரும்பின்- அதாவது, அவர்கள் மூலம் இனவிரோத செயற்பாடுகளைத் துண்டின் அது சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க உதவப்போவதில்லை.

இதனைத் தவிர, ரட்ணசிறிவிக்கிரமநாயக்க போன்ற போர் வெறி பிடித்த அமைச்சர்களை வைத்துக் கொண்டு சமாதானத்தின் மீதான நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதென்பதும் சாத்தியப் பாடானதொன்றல்ல. ஏனெனில், அவர்கள் போரைப் பற்றிப்போடும் கூச்சல் சமாதானத்தின் மீதான நம்பிக்கையைச் சிதறடித்துவிடும்.

ஆகையினால், ஆட்சியாளர்கள் சமாதானம் எவ்வாறு உரத்துப் பேசினும், மேற்கூறிய நடவடிக்கைகள் நிறுத்தப்படாது போனால், அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் மீது நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதும், சமாதானத்தின் மீதான நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பதும், முன்னெடுப்பது என்பதும் சாத்தியப்பாடான தொன்றாக இருக்க மாட்டாது.

# தமிழ் மக்கள் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமையை அவர்களுக்கே வழங்கவேண்டும்

## குமார் ரூபசிங்க தெரிவிப்பு

வடக்கு கிழக்கு மக்கள் தமது எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய உரிமை அவர்களுக்கே வழங்கப் பட வேண்டும் என பொது சமூக அமைப்பின் தலைவர் குமார் ரூபசிங்க தெரிவித்துள்ளார் அதன் ஆரம்ப கட்டத்தை தமிழீழ விடு தலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி யோசனை கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழ் இணையத்தளத்திற்கு செவ்வியளித்த அவர்,இடைக்கால நிர்வாகம் என்பது இரண்டு தரப்பும் வெற்றி பெறக்கூடிய தீர்வைத் தர வேண்டும் எனத் தெரிவித்தார்.தமிழீழ விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகாரமானது 25 வருட காலமாக இடம்பெற்று வந்த உள்நாட்டு யுத்தத்தின் பிரதிபலிப்பாகவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் வரலாற்றில் முதற் தடவையாக தமது யோசனையை சமர்ப்பித்துள்ளமையால் அதற்கு மதிப்பளிக்கவேண்டும் எனவும் குமார் ரூபசிங்க தெரிவித்துள்ளார்

சமஷ்டி தீர்வு என்பது இலங்கைக்கு புதிய ஒன்றல்ல 1920 ஆண்டு எஸ் டபிள்யு ஆர் டிபண்டாரநாயக்க சமஷ்டி முறைக்கு அழைப்பு விடுத்திருந்தார் 1930 ஆம் ஆண்டிலும் மத்திய மாகாணத்திற்கு சமஷ்டி முறை ஆட்சி கோரப்பட்டது. அதேநேரம் சமஷ்டி கட்சியும் பிரித்தானியாவுக்கு சென்று சமஷ்டி முறை தொடர்பாக தீர்க்கமாக ஆராய்ந்திருந்தது. எனவே அந்த முறை இலங்கைக்கு புதிய ஒன்றல்ல.எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1956 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட பண்டா செல்வா ஒப்பந்தமானது. வடக்கு கிழக்குக்கு குறிப்பிடத்தக்க அதிகாரப் பகிர்வை வழங்கும் வகையில் அமைந்திருந்தது. இதனை எதிர்த்தே அன்று ஐக்கிய தேசியக் கட்சி பேரணியை நடாத்தியது. அந்த ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தால் நாட்டில் உள்நாட்டு யுத்தம் ஒன்றைத் தவிர்த்திருக் கலாம்.

இந்த நிலையிலேயே 1995 1997 2000ஆம் ஆண்டுகளின் யோசனைகள் தென்னிலங்கை தரப்பால் சமர்ப்பிக்கப்பட்டன அதன் வளர்ச்சிக்கட்டமாகவே ஐக்கிய தேசிய கட்சி ஒஸ்லோவில் சமஷ்டி முறையை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தமையையும் குமார் ரூபசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# இ.தொ.கா.வை பின்பற்றி மு.கா.வுடம் அரசுக்கு ஆதரவு வழங்க வேண்டும்

## -பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன் தெரிவிப்பு

அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்க முன்வந்திருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியுடன் நியாயமான நிபந்தனைகளை முன்வைத்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் அரசிற்கு ஆதரவு வழங்க முன்வர வேண்டுமென்று ஊடகத்துறை பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன் கேட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் அரசிற்கு ஆதரவு வழங்க முன்வராவிட்டால் அது முஸ்லிம்களைத் தனிமைப் படுத்தும் விபரீதத்தை ஏற்படுத்தலாமென்றும் ஊடகத்துறை பிரதியமைச்சர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியுள்ளார்.இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசிற்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளமையானதுசமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளக் கூடிய சாதகமான நிலையைத் தோற்றுவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் உரிமை உள்ளிட்ட பலவிடயங்களை முன்வைத்து அரசாங்கத்தோடு இணைந்து செல்வது இந்தத் தருணத்தில் அவசியமானதாகும். சமாதானத்தின் பெயரால் சகல தரப்பினரும் தத்தமது நிலைப்பாடுகளில் விட்டுக் கொடுப்புக்களை மேற்கொண்டு இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வை அடைய முயற்சிக்க வேண்டுமென்றும் பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன் கேட்டுள்ளார்.

# தேர்தலுக்கு அடையாள அட்டை அவசியம் என்ற சட்ட மூலம் வருமென்பதில் நம்பிக்கையில்லை

## தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்.

தேர்தல் வாக்களிப்பின் போது அடையாள அட்டைகளைப் பயன்படுத்துவது தொடர்பான சட்ட மூலத்தை அரசாங்கம் நடைமுறைப் படுத்தும் என்பதில் தமக்கு இன்னமும் நம்பிக்கையில்லை என தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இவ்வாறான திட்டங்கள் முன்வைக்கப்பட்ட போதும் இவை பின்னர் ரத்துச் செய்யப்பட்டதை நினைவூட்டிய அவர், 1959ஆம் ஆண்டில் இவ்வாறான சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டதெனினும் பின்னர் அது 1981ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட சட்டமூலத்தின் மூலம் ரத்துச் செய்யப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார். எனவே அந்த சட்டமூலம் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் வரை அதில் தமக்கு நம்பிக்கையில்லை என தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

# கட்டளையை மீறி சென்ற வாகனத்தை பொலிசார் துரத்திப் பிடித்தனர்

பொலிசாரின் கட்டளையைப் பொருட்படுத்தாது தப்பிச் சென்றதாகக் கூறி வாகனம் ஒன்றை கிராண்ட்பாஸ் பொலிசார் நேற்று காலை கைப்பற்றியுள்ளனர்.

வாகனத்தில் பயணம் செய்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர் தப்பிச் சென்ற வாகனத்தின் பின்னால் துரத்திச் சென்ற பொலிசார், அதனை களனிப் பாலத்துக்கு அருகில் வைத்து கைப்பற்றியுள்ளனர். இதேவேளை பலாங்கொடைப் பகுதியில் எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றை ஆயுததாரிகள் நேற்றிரவு கொள்ளையடித்துள்ளனர். முச்சக்கர வண்டி ஒன்றில் வந்த ஐவரடங்கிய குழுவினரே துப்பாக்கி முனையில் இந்த கொள்ளைச் சம்பவத்தை மேற்கொண்டிருக்கலாம் என்று பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# மக்கள் மத்தியில் மனித நேயமுள்ளவர்களாக சகல பொலிசாரும் கடமையாற்ற வேண்டும்

## -சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

மக்கள் மத்தியில் மனிதநேயம் உள்ளவர்களாகக் கடமையாற்ற சகல பொலிசாரும் திடசங்கற்பம் பூண வேண்டுமென்று பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வா தெரிவித்துள்ளார். இதன்மூலம் நாட்டுமக்கள் ஒற்றுமையாகவும், சந்தோசமாகவும் வாழக்கூடிய சூழல் ஒன்று உருவாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்காப் பொலிஸ் திணைக்களத்தின் 138ஆவது ஆண்டு நிறைவு விழா பொலிஸ்மா அதிபர் தலைமையில் கொழும்பு பொலிஸ் மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் போதே பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1930ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகப்போரின் போதும் 70ஆம், 80ஆம் தசாப்தங்களில் நடைபெற்ற பிரச்சினைகளின் போதும் பொலிசார் பாரிய பங்களிப்பை ஆற்றியதாகக் கூறிய அவர், 43ஆம், 44ஆம் ஆண்டுகளிலிருந்து 1975ஆம் ஆண்டு வரைக்கும் சிறிலங்கா பொலிஸ் வரலாற்றில் பொற்காலம் என்று கூறலாம் என்றும் கூறிய அவர், அக்காலத்தில் பாரிய யுத்த மொன்றின் பின்னர் சமூகத்தில் ஏற்படக் கூடிய பதற்றநிலையைத் தடுத்து மிகவும் வெற்றிகரமான முறையில் தமது கடமைகளைச் செய்துள்ளனர். அதேபோல் புரிந் துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதன் பின்னர் சமாதானத்தை நோக்கிச் செல்லும் பயணத்தில் நாம் மீண்டும் அதேபோல் செயற்படவேண்டுமெனவும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

# சனாதிபதி-பிரதமர் முரண்பாடு வலுவடைகிறது

## கட்சிக்குள் பாரிய பிளவுகள் ஏற்படலாம்

சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான முறுகல் நிலை வலுவடைந்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.ஏற்கனவே ஜே.வி.பியுடன் சுதந்திரக் கட்சி கூட்டணி



அமைத்தமை தொடர்பில் அதிருப்தி கொண்டிருந்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியில் தனக்கு ஆதரவானவர்களின் அணி ஒன்றை ஏற்படுத்தி வருவதாகத் தெரியவந்துள்ளது.இதேவேளை சனாதிபதி தனக்கு நெருக்கமான அமைச்சர்களுடன் கூட்டணிஅமைத்துள்ளதாகவும்இதனால் இவர்களுக்கிடையிலான உட்பூசல்கள் நாளாந்தம்அதிகரித்துவருவதாகவும் ஆளும் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் இந்த மோதல்கட்சிக்குள் பாரிய பிளவுகளைத் தோற்றுவிக்கும் அளவிற்கு மோசமான நிலையினை உருவாக்கிவிடலாம் என சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே சூழ்ச்சி நடப்பதாக அவரது நெருங்கிய குழுவினர் பிரதமரிடம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2ஆம் திகதி கட்சியின் 53ஆவது வருடக் கொண்டாட்டத்தின் போது கட்சித் தலைமைக் காரியாலயம் ஒன்றுக்கான அடிக்கல் நாட்டு விழாவுக்கு சில தினங்களுக்கு முன்பிருந்து ஆரம்பித்து இந்த திரிவைக்கும் வேலை அதன் பின்னரும் தீவிரமாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைபவத்தில் பிரதமர் கலந்து கொண்டது. தொடர்பான செய்தியுடன் அவரின் புகைப்படமும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருப்பினும் தொலைக்காட்சி செய்திக



ளில் அந் நிகழ்வில் அவர் கலந்து கொண்டமை பற்றி ஒளிபரப்புச் செய்யாமை பிரச்சினைக்கு மூல காரணமாகியுள்ளது. அத்துடன் நடப்பட்ட அடிக்கல்லில் ராஜபக்ஷவின் பெயர் பொறிக்கப்படாது விட்டமையும் பாரிய பிரச்சினையை தோற்றுவித்துள்ளது. கட்சிதொடர்பான நிகழ்வில் இந்த வஞ்சகம் நடைபெற்றதை குழுவினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

### பிரதமர் மகிந்தராஜபக்ஷ நாட்டிய

# சுதந்திரக்கட்சியின் புதிய கட்டட நினைவுக்கல் காணாமற்போனது

சிறிலங்கா சுதந்திர கட்சியின் 53 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் முகமாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள சுதந்திர கட்சியின் புதிய கட்டடத்திற்கான நினைவுக் கல் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வியாழக்கிழமை பிரதமர் தலைமையில் இந்த நினைவுக்கல் சம்பிரதாய பூர்வமாக திறந்தவைக்கப்பட்டது புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவமும் இடம்பெற்றிருந்தது. இந்த நிகழ்வை தான் இலங்கை திரும்பும் வரை ஒத்திவைக்குமாறு சுதந்திரக் கட்சிச் செயலாளரிடம் சனாதிபதி கோரிக்கை விடுத்திருந்த போதிலும் சனாதிபதியின் வேண்டுகோளைப் புறக்கணித்த சுதந்திர கட்சியின் செயலாளர் மைத்திரி பாலசிறிசேன பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த விழாவை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிரதமர் திரை நீக்கம் செய்து வைத்த நினைவுக் கல்லில் பித்தளையால் ஆன தகடு ஒன்றில் சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ஆனால் அதில் பிரதமரின் பெயர் இடம்பெறிருக்கவில்லை.இந்த விடயம் திரைநீக்கம் செய்த பின்னரே பிரதமருக்கு தெரியவந்ததாகவும் இதனால் பிரதமர் தரப்பு கடும் அதிருப்தி அடைந்தநிலையில் காணப்பட்டதாகவும், சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.இந்த நிலையில் நினைவுக் கல் அந்தப் பகுதியிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் தொடர்புகொள்ள முயற்சித்த போதும் நேற்றுக்காலியில் இடம்பெற்ற மகாநாட்டுப் பணிகளில் அவர்கள் கலந்துகொண்டமையால் அவர்களிடம் இந்த விடயம் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனக் கொழும்பின் ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# மீன்பிடிக்கான அனுமதி மீனவரிடம் நடுக்கடலில் வைத்துப் பறிப்பு

காங்கேசன்துறை கடற்பரப்பினில் மீன்பிடியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட மீனவர்கள் இருவரது மீன்பிடி "பாஸ்" அனுமதியை நடுக்கடலில் வைத்து கடற்படை மீண்டும் பறிமுதல் செய்துள்ளது.

வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த மேற்படி மீனவர்கள் இருவரும் காங்கேசன்துறையினையண்டிய கடற்பரப்பினில் மீன்பிடியில்ஈடுபட்டிருந்தவேளைஇலங்கைக் கடற்படையினரால் கடந்த வார முற்பகுதியில் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் இவர்கள் காங்கேசன்துறைப் பொலிசாரூடாக உயர்பாதுகாப்பு வலயப் பகுதியினுள் அத்துமீறிப் பிரவேசித்ததாகக் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

எனினும் குறித்த மீனவர்களைப் பிணையில் செல்வதற்கான அனுமதியை மல்லாகம் நீதவான் வழங்கியிருந்தார்.

இந் நிலையில் மீண்டும் கடற்றொழிலுக்கு இம்மீனவர்கள் சென்றிருந்த வேளையிலேயே வல்வெட்டித்துறைக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் இவர்களது பாஸ் அனுமதிப்பத்திரங்களைப் பறிமுதல் செய்துள்ளனர். அத்துடன் எதிர்வரும் நாட்களில் மீன் பிடித் தொழிலிலுக்கென கடலினுள்வந்தால் தாங்கள் கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அச்சுறுத்தியுள்ளனர்.

கடற்படையினரின் இவ் அத்துமீறல் தொடர்பாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் கடற்புலிகளிடமும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும்புகார்செய்துள்ளனர். (27)

### மட்டு....

அனுஷ்டிக்கப்படுவதனால் அப்பகுதி முற்றாகச் செயலிழந்தது உள்ளூர் மற்றும் தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை. நகர்ப்புற மற்றும் உள்ளூர் வர்த்தக நிலையங்கள் பொதுச் சந்தைகள் யாவும் மூடப்பட்டன. தனியார் கல்வி நிலையங்களில் வகுப்புக்கள் எதுவும் இடம்பெறவில்லை. வீதிகள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன. படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்கள் ஞாபகார்த்தமாக காலை இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன. மட்டக்களப்பு மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியம் இந்தத் துக்க தினத்துக்கான அழைப்பினை விடுத்திருந்தது.

### முல்லை...

3.00 மணிக்கு இக் கண்டனப்பேரணியும் மகஜர் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. என முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் திரு.அ. மரியராசா தெரிவித்தார். (20)

சின்னமுத்து உங்கள் இறப்பிற்கும், ஜேர்மன் சின்னமுத்து பிறவிக்குறைபாட்டிற்கும் வழிவகுக்கிறது. எனவே MR தடுப்பு மருந்து உங்களுக்கு இவற்றிலிருந்து மீள பூரண பாதுகாப்பை வழங்குகிறது.

- தமிழீழ சுகாதார சேவைகள்

# அரசில் இணைந்ததன் மூலம்தொண்டமான் தமிழ் மக்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியுள்ளார்

### கூட்டமைப்பு பா.உ.சந்திரநேரு

தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதக் கருத்துக்களை பேசி வரும் ஜே.வி.பி அங்கம் வகிக்கின்ற அரசாங்கத்தில் இணைந்ததன் மூலம் ஆறுமுகம் தொண்டமான் தமிழ் மக்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளார் என முன்னாள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தெரிவித்துள்ளார் நேற்று முன்தினம் அக்கரைப்பற்றில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், ஜே.வி.பியின் இனவாத தீயிற்கு உரமூட்டுவதாகவே ஆறுமுகம் தொண்டமானின் செயல் அமைந்துள்ளது எனத் தெரிவித்தார். மலையக மக்கள் என்றும் தமிழ் இனப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்து வந்துள்ளார்கள். அவர்களில் பெரும்பாலானோர் அந்த போராட்டத்தில் பங்காளிகளாகவும் இருக்கிறார்கள் இந்த நிலையில் அவர்களின் தலைவர் என சொல்லிக் கொள்ளும் ஆறுமுகம் தொண்டமான் மேற்கொண்ட செயலானது அவர் சலுகைகளுக்காக மக்களின் உரிமைகளை அடகு வைப்பவர் என தெளிவுபடுத்தியுள்ளதாகவும் அரியநாயகம் சந்திரநேரு தெரிவித்தார் (32)

# கொழும்பு நகரின் முக்கிய இலக்குகள் மீது புலிகள் தாக்குதல் நடத்த வாய்ப்புக்கள் உண்டாம்

### இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு நகரின் முக்கிய இலக்குகள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த வாய்ப்புகள் உண்டு எனவேதான் தாம் பாதுகாப்புஏற்பாடுகளைப் பலப்படுத்தியுள்ளதாக இராணுவ பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

கொழும்பின் ஊடகம் ஒன்றுக்கு செவ்வியளித்த அவர், கொழும்பின் பாதுகாப்பைப் பலப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறினார். எனினும் பாதுகாப்புக்கு மத்தியிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களை போர் நிறுத்த உடன்படிக்கை காரணமாக தடுக்க முடியாதுள்ளதாக சுமேத பெரேரா தெரிவித்துள்ளார். இதேவேளை போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் அலுவலகங்களுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்க படைத்தரப்பு முடிவெடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மன்னாரில் ஆட்டோவிலிருந்து போலி நாணயத்தாள்கள் பிடிபட்டன

மன்னாரில் ஆட்டோ ஒன்றிலிருந்து போலி நாணயத்தாள்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று இரவு வவுனியாவிலிருந்து வந்த ஆட்டோ ஒன்றினைச் சந்தேகத்தின் பேரில் முருங்கன் பொலிசார் வழிமறித்து சோதனையிட்ட வேளை அந்த ஆட்டோவில் இருந்த அங்கர் பால்மா பைக்கற்றுக்களிலும் ஹோர்லிக்ஸ் பிஸ்கட் பைக்கற்றுக்களிலும் இருந்து.500ரூபா தாள் 9 ஆயிரம் ரூபாவும் 100 ரூபாதாள் 10 ஆயிரம் ரூபாவும் கொண்ட போலித்தாள்கள் பிடிபட்டுள்ளன. இதிலிருந்தோரைக் கைது செய்த பொலிசார் இன்று நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லவுள்ளனர்.

(மி)

### தமிழருக்கு..

இவ்வாறு நேற்று மாலை யாழ். பொதுசன நூலகத்தில் ஆரம்பமான 'அகம்புறம்' காண்பியல் கண்காட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

கடந்தகாலப் போரினாலும் இன அழிப்பு வன்முறைகளினாலும் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்திற்கு அவர்களது அடிப்படை அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் அம்சங்களுடன் கூடிய உண்மையான சமாதானமே தேவைப்படுகிறது. இதற்காகவே தமிழர்கள் ஆயுத வழியில் போராடி அரசியல் வழியில் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளச் சமாதான வழிக்கு வந்துள்ளார்கள்.

எனினும் பேரினவாத அரச தலைமைகள் சமாதானம் என்பதைத் தமக்கு அரசியல் இலாபத்தை ஈட்டித்தரும் ஓர் வியாபாரப் பொருளாகக் கையாண்டு வருகின்றனர். இதனால் தான் சமாதான முன்னெடுப்புகள் இன்று ஆபத்தான கட்டத்தை நெருங்கியுள்ளது.

எனவே உண்மைகளை மூடி மறைத்தும், உரிமைகளைத் தட்டிப் பறித்தும் உருவாக்கப்படும் சமாதானத்தை தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்கமாட்டார்கள் ஒவ்வொரு இனமும் சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய சமாதானத்தை உருவாக்கவே புலிகளும் தமிழ் மக்களும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இனவிரோத வன்செயல்களால் தமிழ் மக்களும் அவர்களது தாயகப் பிரதேசங்களும் சந்தித்த இன்னல்களை உலக அரங்கிற்கு வெளிப்படுத்தும் விதமாக 'அகம்-புறம்' எனும் காண்பியல் கண்காட்சி யாழ். பொது நூலகத்தில் நேற்று முதல் இடம்பெற்று வருகிறது.

'சேது' காண்பியல் கலை கற்கைப்புலமும் 'தீர்த்'சர்வதேச கூட்டிணைப்பும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இக்கண்காட்சியில் 25இற்கும் மேற்பட்ட கலைஞர்களது சுமார் 100 வரையிலான ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வன்செயல்களால் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அழிவுகள், இழப்புகள்,கொடுமைகள் என்பவற்றைச் சித்தரிக்கும் ஓவியங்கள், சிற்பங்கள், பிரசுரங்கள், புகைப்படங்கள் என்பனவுடன்கூடிய இக்கண்காட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழ். நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதில் பிரதமவிருந்தினராக தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் மோகனதாஸ் அகழ்வாராட்சி நிபுணர்பேராசிரியர் வீரசிங்கம் ஆகியோர் உட்பட சர்வதேசப் பொது அமைப்புக்கள்,அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், கலைஞர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (33)

### பேச்சுவார்த்தை....

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தைஅதிகரிக்கவில்லை இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக்கட்சி கொழும்பில் இம்மாதப் பிற்பகுதியில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதென அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 06ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.